# உதய சூரியன்

UTHAYASOORIYAN උදයසූරියන්

*Source for reading hunters*

உதயசூரியன் (களம் 02 - உதயசூரியன் - 14) (28 நவம்பர் 2013) பக்கம்: 32 **விலை: 20/=**










# பாதுகாப்புத் தேடி அடைக்கலம் புகுந்த இடத்திலேயே பாலியல் வன்கொடுமைகளா?

## அட்டமஸ்கட இல்லம் பற்றி வெளியாகும் திடுக்கிடும் தகவல்கள்

வவுனியா மாவட்ட மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்த வவுனியா அட்டமஸ்கட சிறுவர் இல்ல பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான விசாரணைகளில் தற்போது பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

அட்டமஸ்கட சிறுவர் இல்ல விகாராதிபதியினால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக சிறுவன் ஒருவன் கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட சிறுவர் பாதுகாப்பு பிரிவினர் அங்கிருந்த சிறுவர்களை பொறுப்பேற்று அவர்களை மருத்துவ பரிசோதனை செய்ததில் சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமையும் சிறுவர்கள் சித்திரவதை செய்யப்பட்டமையும் உறுதிப்படுத்தப்பட்டது. இதனடிப்படையில் கடந்த 6 ஆம் திகதி சந்தேகத்தின் பெயரில் விகாராதிபதி கல்யாணதிஸ்ஸ தேரர் கைது செய்யப்பட்டு 14 நாள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.



இந் நிலையில் அவர் மீதான வழக்கு கடந்த 19 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இவருடைய அரசியல் செல்வாக்கு மற்றும் பணபலம் என்பவற்றைக் கொண்டு வவுனியா மாவட்ட சட்டத்தரணிகளின் துணையுடன் விகாராதிபதி பிணையில் வெளியில் வர கடும் முயற்சி செய்த போதும் விசாரணைகள் இடம்பெற்று வருவதாலும் சாட்சிகளின் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விகாராதிபதியை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிபதி எஸ். ராமகமலன் தெரிவித்தார்.

இவரிடமும் சிறுவர்களிடமும் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சித்திரவதை தொடர்பான வழக்கில் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் 24 வயதுடைய கோணேஸ்வரன் காங்கேசன் என்பவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அட்டமஸ்கட சிறுவர் இல்லத்தின் நிர்வாகியாகிய கல்யாணதிஸ்ஸ தேரோவின் உதவியாளராக அந்த இல்லத்தில் இவர் பணியாற்றி வந்துள்ளார். வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் இந்த சந்தேக நபர் கடந்த 26 ஆம் திகதி ஆஜர் செய்யப்பட்டதையடுத்து நீதவான் இவரை இரண்டு வாரம் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இந்த சிறுவர் இல்லத்தின் நிர்வாகியான பௌத்த மதகுரு வரும் டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி வரையில் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய ஏற்கனவே தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் இந்த சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த மற்றுமொரு 12 வயது சிறுவன் ஒருவன் தன் மீதும் சித்திரவதை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளிடமும் பொலிசாரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

கடந்த 26 ஆம் திகதி முறைப்பாடு செய்த பாதிக்கப்பட்ட சிறுவன் இது தொடர்பில் தெரிவிக்கையில்:-

நான் குடும்ப நிலை காரணமாக அட்டமஸ்கட சிறுவர் இல்லத்தில் மூன்று வருடங்களாக தங்கி இருந்தேன். நான் விளையாடிக் கொண்டிருந்தபோது குழப்படி செய்ததாக பழைய கறல் பிடித்த ஆணி இருந்த கட்டை ஒன்றினால் எனக்கு அடித்தார்கள். எனக்கு காலில் காயம் ஏற்பட்டது. காலுக்கு மருந்து கட்டாமல் பெண்டேஜ் போட்டார்கள். அதன்பின் என் கால் கை எல்லாம் புண் வந்துவிட்டது.



இப்பொழுதும் அது மாறவில்லை. எனக்கு தலையிலும் அடித்து பெரிய் காயம் எறபட்டது. தேங்காய் பால் குடிக்கத் தந்தார்கள். அதன் பின் அது மாறிவிட்டது. என்னைப் போல என்னுடைய அண்ணாவுக்கும் அடிப்பார்கள். அவருக்கும் காயங்கள் இருக்கு. எங்கள் இல்லத்தில் இருக்கும் இரண்டு பேர் என்னை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துவார்கள். இதே மாதிரி மற்றவர்களையும் செய்வார்கள் எனத் தெரிவித்தான்.

அட்டமஸ்கட சிறுவர் இல்லத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் பொலிசாரிடம் முறைப்பாடு செய்யக் கூடாது எனவும் குறித்த பாதிக்கப்பட்ட சிறுவனின் உறவினர்களுக்கு தொலைபேசி மூலம் மிரட்டப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சிறுவனின் முறைப்பாடு தொடர்பாக சிறுவன் நன்னடத்தை உத்தியோகத்தர் எஸ்.றுவான் தெரிவிக்கையில்:- சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் குறித்த சிறுவன் உறவினருடன் வந்து முறைப்பாடு செய்துள்ளதாகவும் தற்போது வவுனியா பொலிஸில் முறைப்பாட்டுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

(தொடர்ச்சி 08 ஆம் பக்கம்...)



# இந்தியாவில் பரபரப்பை ஏற்படுத்திய ஆருஷி கொலை வழக்கு!

கடந்த 5 ஆண்டுகளாக பெரும் பரபரப்பை கிளப்பியிருந்த ஆருஷி கொலை வழக்கு முடிவுக்கு வந்திருக்கிறது. ஆருஷியின் பெற்றோர்களே குற்றவாளிகள் என கருதி நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.





2008 ஆம் ஆண்டு ஆருஷி என்ற 14 வயது சிறுமி நொய்டாவில் உள்ள தனது வீட்டில் கொலை செய்யப்பட்டு கிடந்தார். இந்தக் கொலை நடந்ததில் பெரும் திருப்பங்களும் சந்தேகங்களும் உள்ளன. ஆருஷி கொலை செய்யப்பட்டுக் கிடந்தார். அவரது வீட்டில் வேலை செய்த 45 வயது ஹேமராஜ் என்ற நேபாளியையும் காணவில்லை என்பதால் ஹேமராஜ் அதை செய்திருப்பார் என்ற சந்தேகம் அவர் மீது திரும்பியது. ஆனால் ஹேமராஜ் வீட்டு மாடியில் பிணமாகக் கிடந்தார்.

அடுத்ததாக சந்தேகம் ஆருஷியின் பள்ளி நண்பர் மீது திரும்பியது. கொலை நடப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னிருந்து ஆருஷியுடன் நட்பாக வளைய வந்த அவரது பள்ளி மாணவர், ஆருஷி இருவரும் அடிக்கடி தொலைபேசியில் பேசியுள்ளார்கள்.

எனவே அவர்தான் இதைச் செய்திருக்க வேண்டும் என்ற சந்தேகம் திரும்பியது. இந்நிலையில் ஊடகங்கள் இந்த வழக்கில் அதிக ஆர்வம் காண்பித்தன. அந்த மாணவரை சனல்கள் நேரடியாக போனில் அழைத்து பல சந்தேகங்களைக் கேட்டனர். அந்த மாணவரை கொலைக்குற்றவாளியாக சித்திரித்தன. ஆனால் விசாரணைக்கு பின் அந்த மாணவர் நிரபராதி என்று தெரியவந்தது.

ஆருஷியும் வேலைக்காரர் ஹேமராஜூம் தவறாக நடந்து கொண்டதைப் பார்த்து கோபமடைந்த அவரது பெற்றோர்களான ராஜேஷ் தல்வாரும், நுபுராவும் தான் இந்த கொலை செய்துள்ளார்கள் என்ற ஒரு தியரி வைக்கப்பட்டது.

ஹேமராஜூக்கு வயதோ 45, ஹேமராஜ் சத்திரசிகிச்சை செய்யப் பயன்படும் கூர்மையான கத்தியால் அறுத்து கொலை செய்யப்பட்டுள்ளார். ஆருஷியின் பெற்றோர்கள் மருத்துவர்கள் என்பதால் இந்த சந்தேகம் மேலும் வலுவானது.

ஆருஷியின் பெற்றோர்கள் இந்த குற்றச்சாட்டை தொடர்ந்து மறுத்து வருகிறார்கள். மேலும் கொலையை செய்துவிட்டு ஆதாரங்களை மறைத்துவிட்டதாக பொலிஸ் குற்றம் சாட்டியது. இந்த வழக்கில் முதலில் ஆதாரங்கள் இல்லை என்று நீதிமன்றத்தால் தல்வார் தம்பதிகள் விடுவிக்கப்பட்டனர். ஆனால் சிபிஐ விசாரிக்க உத்தரவிடப்பட்டது.

சிபிஐ விசாரணையில் ராஜேஷ் தல்வார் மற்றும் நுபுரா தான் இந்தக் கொலையை செய்தார்கள் என்று முடிவு செய்து வழக்கு தொடரப்பட்டது.

இவர்கள் குற்றவாளிகள் என்று முடிவு செய்த சிபிஐ நீதிமன்றம் இருவருக்கும் ஆயுள் தண்டனை விதித்துள்ளது. தீர்ப்பை கேட்டதிலிருந்து ஆருஷியின் பெற்றோர்கள் சிறையில் உணவு உண்ண மறுத்து வருகின்றனர்.

கொலையை நேரில் கண்ட சாட்சிகள் ஏதும் இல்லை. சந்தர்ப்ப சாட்சியங்கள் ஆருஷியின் பெற்றோர்களுக்கு எதிராக உள்ளது. தன் வயதொத்த ஆண் நண்பருடன் நட்பாக இருந்த ஆருஷி ஏன் 45 வயது வேலைக்காரருடன் பாலியல் தொடர்பு கொண்டிருக்கப் போகிறார் என்ற கேள்வியும் பல ஆண்டுகள் பிள்ளைப்பேறு இல்லாத ஆருஷியின் பெற்றோர்கள் டெஸ்ட் டியூப் பேபியாக பெற்றுக் கொண்ட தனது மகளைக் கொன்றது ஏன் என்ற கேள்விகள் இன்னும் இந்த வழக்கில் தொங்கிக் கொண்டுள்ளது.

ஆருஷியின் கொலை வழக்கில் தீர்ப்பு வழங்கப் பட்டாலும் இந்த வழக்கு இன்னும் இந்தியாவின் மர்மம் விலகாத கொலை வழக்குப் பட்டியலில் இருந்து நீங்கவில்லை.

நன்றி - சற்றுமுன் இணையம்

## தபால் மூலக் கல்வி

பின்வரும் கற்கை நெறிகளுக்கு மாணவர்கள் சேர்க்கப்படுகின்றார்கள்.

1. Dip. in Social Science – சமூக விஞ்ஞானம்.
2. Dip. in Disaster Mgt – அனர்த்த முகாமை
3. Dip. in Psychology – உளவியல்
4. Dip. in Library Mgt – நூலக முகாமைத்துவம்
5. Dip. in Human Recourse Management – மனித வள முகாமைத்துவம்
6. Dip. in Educational Mgt – கல்வி முகாமைத்துவம்.
7. Dip. in Montessori – ஆரம்ப பாடசாலை
8. Dip. in Marketing – சந்தைப்படுத்தல்
9. Dip. in Business Mgt – வியாபார முகாமை
10. Dip. in Office Mgt – அலுவலக நிர்வாகம்
11. Dip in Spoken English – ஆங்கிலப் பயிற்சி

மொழி மூலம்: தமிழ்

அனைத்து பாடங்களும் தபால் மூலம் கற்பிக்கப்படும், இறுதியில் சர்வதேச அங்கீகார Certificate வழங்கப்படும். காலம் 6 மாதம், கட்டணம் 4800.00 (மாதாந்தம் Rs. 800) Application Form, மேலதிக விபரங்கள் பெற கீழ்வரும் கையடக்க தொலைபேசிக்கு பெயர், முகவரியை SMS செய்யுங்கள். 0713144536

INSTITUTE OF SOCIAL & TECHNICAL STUDIES
400, First Floor, Main Street, Maruthamunai 3,
Kalmunai . http://istsedu.net84.net
வெளிநாட்டில் உள்ளோர்: ists999@gmail.com
affiliated with: IAO – U.S.A

Internationally Recognized Certificate

## தேவை

கொழும்பு 15, முகத்துவாரம், S.D. பெர்னாந்து மாவத்தை, இல. 29 இல் அமைந்துள்ள மின்றோ றெஸ்டூரண்டுக்கு கோக்கி ஒருவரும் வெயிற்ரர் ஒருவரும் தேவை.

தொலைபேசி ☎: 077-7060309

## வேலை வாய்ப்பு

நீங்கள் விரும்பியவாறு உங்களுக்கு ஏற்ற தொழில் வாய்ப்பு எங்களிடம். பிரதான தொழிற்சாலைகளான ஜேம், கோடியல், பிஸ்கட், கிளவுஸ், தேயிலை, சிம்காட், பத்தி, பருப்பு போன்றவற்றை உற்பத்தி, லேபல், பொதியிடல், களஞ்சியம் போன்ற பிரிவுக்கு 17–50 வயதான ஆண்/பெண் தேவை. சம்பளம் 18,000/=, 22,000/=, 34,000/= சாப்பாடு, தங்குமிடம், குறைந்த விலையில். வருகை தரும் நாளிலேயே தொழில் வாய்ப்பு (நண்பர்கள், திருமணமானவர்கள் ஒரே நிறுவனத்தில்).

தொடர்புகளுக்கு ☎: 076-6031098 / 077-4430166 / 011-4422124

## 1500 வேலை வாய்ப்புகள்

- கல்வி அறிவு உள்ள இல்லாத
- ஆண்/பெண்
- வீட்டில் இருந்து செல்ல தங்கி வேலைசெய்ய
- நண்பர்கள்/குழுக்கள்/திருமணமானவர்கள்
- வயது 17-55
- சம்பளம் 35,000 க்கு மேல்
- துறைமுகம், விமான நிலையம் (Pvt)
- Driving
- தொழிற்சாலைகள் (சொக்லேட், பிஸ்கட், ஜேம், கோடியல்)
- பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
- Hotel
- மேசன் / வடு / உதவியாளர்கள்.

0778508118 / 0114422124



எறும்புக்கும் யானைக்கும் பசி ஒன்றுதான்,
ஆனால்
எறும்பின் உணவு யானைக்கு போதாது,
யானையின் உணவு எறும்புக்கு சேராது,
அதனால்
தேவைக்கு மட்டும் ஆசைப்படு!!

# வாழ்க்கை ஒரு போராட்டம்



வேட்டைக்குப் போவதென்பது பலருக்கு ஒரு ஜாலியான பொழுது போக்காகத்தான் இருக்கிறது. காடு என்பது பயங்கரமான பிரதேசம். எந்தப் புதரிலிருந்து எந்தக் காட்டுமிருகம் பாயுமோ... எதுவுமே தெரியாது. காட்டுக்குள் வேட்டையாடப் போவது திகிலான விஷயம். என்றாலும், ஏன் வேட்டையாடப் போகிறார்கள்?

எதிர்பாராத விஷயங்களை எதிர்கொள்வதில் மனிதனுக்கு எப்போதுமே ஓர் அலாதியான இன்பம். எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத திசையில் இருந்து வரும் தாக்குதல்களை எதிர்கொண்டு வெற்றி பெறுவதில்தானே முழுமையான சந்தோஷமும் திருப்தியும் கிடைக்கும்?

அப்படிப் பார்த்தால் நம் வாழ்க்கையும் ஒரு மாய வேட்டைதானே? எதிர்பாராத நபர்களிட மிருந்து எதிர்பாராத நேரத்தில் சோதனைகள், நெருக்கடிகள் வரும், தாக்குதல்கள் வரும். அதை எதிர்கொள்வதில்தான் சந்தோஷம் இருக்கிறது. ''ஐயோ.. என் ஆருயிர் நண்பன் இப்படி என்னை ஏமாற்றுவான் என்று கனவிலும் நினைக்கவில்லையே! செழிப்பாக ஓடும் என்று நினைத்துத் தொடங்கிய வியாபாரம் இப்படி ஒரேயடியாகப் படுத்துவிட்டதே!'' என்றெல்லாம் வருத்தப்பட்டுப் புலம்புவதில் அர்த்தம் இல்லை.

வேட்டைக்குப் போகும் யாரும் இந்தப் புலி நான் ஏமாந்த நேரம் பார்த்து என் மீது பாய்ந்துவிட்டது., இது நீதியில்லை என்று புலம்பியதுண்டா?

வாழ்க்கையை ஒரு வேட்டையாக நினைத்துக் கொள்ளுங்கள். போராட்ட உத்வேகமும் புதிய உற்சாகமும் கிடைக்கும். ஆனந்தம் பிரவாகம் எடுக்கும்!

## மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

ரொபோகப் விளையாட்டுக் கழகம் 9 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு அணிக்கு ஆறு பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இப்போட்டியானது எதிர்வரும் டிசம்பர் 14, 15 ஆம் திகதிகளில் ஹோல்புறூக் தியேட்டர் மைதானத்தில் காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் வெற்றிபெறும் அணிகளுக்கு முதல் பரிசாக 20,000 பணப்பரிசும் வெற்றிக்கிண்ணமும் வழங்கப்படும். 2 ஆம் பரிசாக ரூபா 10,000 பணப்பரிசும், வெற்றிக்கிண்ணமும் வழங்கப்படுவதோடு சிறந்த ஆட்டநாயகன், தொடர் ஆட்டநாயகன் ஆகியோருக்கான விருதுகளும் ஹெட்ரிக் மற்றும் அரைச்சத வீரருக்கு 2000 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இந்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அனைத்து அணிகளையும் பங்குபற்றுமாறு கழக ஏற்பாட்டாளர்கள் கேட்கின்றனர்.

உங்களது பதிவுகளை மேற்கொள்வதற்கும் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் எம்.கேதீஸ்வரன் - 0770774490 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்கொள்ள முடியும்.

## வாழ்க்கைக்கு வழிசொல்லும் விழிப்புணர்வுத் தொடர்

# வெற்றிக்கு ஆசை



வெற்றியை எதற்காக விரும்புகிறீர்கள்? அது உற்சாகம் தரும் என்று தானே? கூடவே, வெற்றியை அடையத் தேர்ந்தெடுக்கும் பாதையும் உற்சாகமாக அமைந்துவிட்டால்...! வெற்றியின் உற்சாகத்தை வெற்றி அடையும் முன்னரே அனுபவிக்கலாம் அல்லவா! குறுக்கு வழிக்கு ஆசைப்பட்டு அதை ஏன் இழக்கப் பார்க்கிறீர்கள்? வெற்றியின் உண்மையான அர்த்தத்தைப் புரிந்துகொள்ளாதவர்கள் தான் குறுக்கு வழியில் வெற்றிக்கு ஆசைப்படுகிறார்கள்.

நம்பிக்கை உள்ளவன் எல்லாப் பிரச்சினைக ளிலும் வாய்ப்பைக் காண்கிறான்.

நம்பிக்கை இல்லாத வன் எல்லா வாய்ப்பு களிலும் பிரச்சினை களைக் காண்கிறான்.



உங்களுக்கு மதிப்பில்லை என்று நீங்கள் உணரும் இடங்களில் மௌனமாக இருக்கப் பழகுங்கள்!

காலப்போக்கில் உங்கள் மௌனம் உங்களுக் கான மதிப்பை அங்கே ஈட்டித் தரும்....!

முதல் முயற்சியில் வெற்றி பெறுபவன் அதிர்ஷ்டசாலி, இரண்டாம் முயற்சியில் வெற்றி பெறுபவன் புத்திசாலி, மூன்றாம் முயற்சியில் வெற்றி பெறுபவன் தைரியசாலி, நான்காம் முயற்சியில் வெற்றி பெறுபவன் அனுபவசாலி... வெற்றி பெறும்வரை முயற்சி செய்பவன் சாதனையாளன்

# இது ஒரு கதையல்ல

ஒரு நாய் கடைக்கு வந்துச்சு. கடைக்காரர் விரட்டிவிட்டார். திரும்பத் திரும்ப அந்த நாய் கடைக்கு வந்துச்சு. என்னடா பெரிய தொல்லையா போச்சுன்னு வெளிய வந்து பார்த்தா அந்த நாய் வாயில ஒரு சீட்டும், பணமும் இருந்துச்சு. கடைக்காரர் ஆச்சரியமாகி அந்த சீட்டை எடுத்து அதில் உள்ள சாமான்களை போட்டு, மீதிப் பணத்தையும் அதே பையில் நாயின் கழுத்தில் மாட்டிவிட்டார். நாய் திரும்பி நடக்க ஆரம்பிச்சது.

கடைக்காரர் சுவாரஸ்யமாகி நாய் பின்னாலேயே நடக்க ஆரம்பித்தார்.

அந்த நாய் தெருவைக் கடந்து மெயின் ரோட்டிற்கு வந்தது. அப்போது ரெட் சிக்னல்... அந்த நாய் ரோட்டைக் கடக்காமல் நின்றது.

பச்சை லைட் விழுந்தவுடன், ரோட்டைக் கடந்தது. கடைக்காரருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அதன் பின்னாலேயே செல்ல முடிவெடுத்தார்.

அந்த நாய் ஒரு பேருந்து நிறுத்தத் தில் நின்றது.

ஒரு குறிப்பிட்ட பேருந்து வந்தவுடன் நாய் பேருந்தில் ஏறியது.

கண்டக்டரும் நாய் வாயில் இருந்த பணத்தை எடுத்துக் கொண்டு ஒரு டிக்கெட் கொடுத்தார். இரண்டு நிறுத்தங்கள் கடந்து நாய் பேருந்தில் இருந்து இறங்கியது. கடைக்காரரும் அதன் பின்னால் இறங்கினார்...

நாய் ஒரு தெருவைக் கடந்து ஒரு வீட்டின் முன் நின்று கதவைத் தட்டியது...

கதவு திறந்து ஒரு ஆள் வந்தார்...

நாயின் கழுத்தில் உள்ள பையை கழட்டிவிட்டு நாயை அடித்தார்...

கடைக்காரர் ஓடிச்சென்று : நிறுத்துங்க? ஏன் அடிக்கிறீங்க? அது எவ்வளவு பொறுப்பா கடைக்கு போயிட்டு, சிக்னலை மதிச்சு, பஸ்ல டிக்கெட் எடுத்துகிட்டு வருது அதைப்போய் அடிக்கிறீங்களே...?

அதுக்கு அந்த ஆள் சொன்னார், வீட்டு சாவிய எடுத்துட்டு போகாம வந்து கதவ தட்டுது பாருங்க. நாய்க்கு கொஞ்சம் கூட பொறுப்பே இல்லன்னு...

**நீதி : நமக்கு மேல உள்ள முதலாளி, மேனேஜர் எல்லோரும் இப்படித்தான்... நீங்க எவ்வளவுதான் பொறுப்பா இருந்தாலும் உங்களுக்கு நல்ல பெயரே கிடைக்காது.**

# காணி உரிமைக்கு ஆப்பு வைக்குமா வரவு-செலவுத் திட்ட முன்மொழிவு?



மத்திய மாகாண சபைத் தேர்தலின் போது மலையக மக்களின் குடியிருப்பு பிரச்சினை பெரிதும் பிரஸ்தாபிக்கப்பட்டது. தேர்தல் பிரசார கூட்டங்களில் கலந்துகொண்ட ஜனாதிபதி லயன் முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என அறிவித்திருந்தார்.

அதன் அடிப்படை 2014 இற்கான வரவு-செலவுத் திட்டத்தில் மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் 50,000 வீட்டுத் தொகுதிகளை நிர்மாணிப்பதற்கு வரவு-செலவு திட்ட முன்மொழிவுகளை மேற்கொண்டிருந்தார்.

இந்த அரசாங்கம் மலையக மக்களுக்காக பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

என்றாலும் மலையக மக்களின் மிக முக்கியமான பிரச்சினைகளான காணியுரிமை, வீட்டுவசதி மற்றும் தொழில் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன.

அந்தவகையில் மலையக மக்களின் குடியிருப்பு பிரச்சினையை தீர்ப்பதற்கு வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக அரசு கவனம் செலுத்தியிருப்பது வரவேற்கத்தக்க விடயம்.

இருந்தபோதும் லயன் குடியிருப்புகளில் இருந்த தோட்ட மக்களுக்கு 7 பேர்ச்சஸ் காணியுடன் தனி வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டு வந்ததுடன் ஜனாதிபதியினுடைய தேர்தல் விஞ்ஞாபனமான மகிந்த சிந்தனையிலும் இதுவே குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்த போதும் தற்போது ஜனாதிபதியினால் தோட்ட மக்களுக்காக முன்மொழியப்பட்டுள்ள வீட்டுத்திட்டம், தொடர்மாடி வீட்டுத்திட்டமாகவே உள்ளது. ஆகவே 7 பேர்ச்சஸ் காணியுடன், தனி வீடுகளை அமைக்கும் அரசின் திட்டம் ஏன் திடீரென மாடிவீட்டுத் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது என்பது புரியாத புதிராக உள்ளது.

மாடி வீட்டுத் திட்டங்கள் பெரும்பாலும் நகர்ப்புறங்களுக்கே பொருந்தும். அதிகரித்த மக்கள் தொகைக்கேற்ப குறைந்தளவு நிலத்தில் அதிக பயன்பெறும் வகையிலேயே தொடர்மாடி வீடுகள் கட்டப்படுகின்றன.

ஆனால், மலையகத்தில் அதன் தேவைப்பாடு என்ன? மலையகத்தில் கணிசமான தரிசு நிலங்கள் காணப்படுகின்றன. அந்நிலங்களில் குறிப்பிட்ட தொகையை தோட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்கக்கூடிய வாய்ப்பு அதிகமாக காணப்படுகின்றபோதும் தொடர்மாடி வீடுகள் அமைப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கையின் நோக்கம் என்னவென்று கேள்வி எழுந்துள்ளது.

காடுகளாக இருந்த நிலங்களை விளைநிலங்களாக மாற்றி நூற்றாண்டுக்கும் மேலாக நாட்டின் பொருளாதார கட்டமைப்பின் முக்கிய பங்குதாரர்களாக இருப்பவர்கள் மலையக பெருந்தோட்டத்துறை மக்கள். மண்ணிற்காகவே தமது உழைப்பை குறைந்த ஊதியத்திற்கு வழங்கி, அடிப்படை வசதிகள்கூட பூர்த்திசெய்யப்படாத நிலையில் பெருந்தோட்டத்துறையை பாதுகாத்தும், வளப்படுத்தியும் வருகின்றனர். ஆகவே, இவர்கள் இந்த நாட்டின் ஒரு பேர்ச்சஸ் காணிக்காவது சொந்தக்காரர்களாக இருக்கக்கூடிய தகுதி இல்லையா?

தொடர் மாடிக்கும், லயன் முறைக்கும் பெரிய வித்தியாசம் இருக்கப் போவதில்லை. மாறாக தொடர்மாடிகளில் ஓரளவு உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்யப்படும். ஆனால், லயன் குடியிருப்புகளில் உள்ள அதே சமூக சூழலே தொடர்மாடிக் குடியிருப்புகளிலும் உருவாகும். இதுவும் ஏதோ ஒரு வகையில் சமூக முன்னேற்றத்தில் தாக்கத்தைச் செலுத்தும்.

இந்த நாட்டில் மலையக பெருந்தோட்டத்துறை மக்கள் ஏனைய சமூகங்களுக்கு நிகராக மதிக்கப்பட வேண்டுமானால் அவர்களுக்கும் காணி உரிமை வழங்கப்பட வேண்டும். அந்தக் காணியுரிமை என்பது வீட்டுடன் இணைந்ததாகவே காணப்படுகின்றது. இதுவரை தமக்கு 7 பேர்ச்சஸ் காணியுடன் வீடு கட்டிக்கொடுக்கப்படும் என்ற எதிர்பார்ப்புகளுடன் தோட்ட மக்கள் காணப்படுவதுடன் தமது காணி உரிமையும் உறுதிப்படுத்தப்படும் என எண்ணியிருந்தனர்.

இருந்தபோதும் தற்போது 50,000 வீட்டுத் தொகுதிகள் அமைக்கப்படும் என ஜனாதிபதியின் முன்மொழிவுகளைத் தொடர்ந்து அந்த எதிர்பார்ப்புகள் தவிடுபொடியாகியுள்ளது.

தோட்ட மக்கள் தமக்கென தமது வீட்டுக்கு முன்னால் ஒரு மரக் கன்றைக்கூட நாட்ட முடியாத துர்ப்பாக்கிய நிலைமை தோன்றிவிடுமா? என்ற அச்சமும் தோன்றியுள்ளது.

எனவே மகிந்த சிந்தனையில் குறிப்பிட்டுள்ள 7 பேர்ச்சஸ் காணியுடனான வீடு என்ற தமது கொள்கையையே அரசு அமுல்படுத்த வேண்டும் என்பதே தோட்ட மக்களின் எதிர்பார்ப்பாகும். தோட்ட மக்களின் எதிர்பார்ப்பு மிக்க தலைவர்களில் ஒருவரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தோட்ட மக்களின் காணி உரிமை விடயத்தில் மிகுந்த அவதானம் செலுத்தவேண்டும் என்பதே மலையக புத்திஜீவிகளின் கருத்தாக உள்ளது.

அண்மையில் வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்ட நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வீ.இராதாகிருஷ்ணன் தோட்ட மக்களின் தனிப்பட்ட நிலம் சம்பந்தமாக வலியுறுத்தப் போவதாகக் கூறியிருந்தார். அதேபோல் மலையகத்தில் உள்ள அனைத்து அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும், அரசோடு இணைந்து செயற்படுகின்ற ஏனைய அனைத்து தரப்பினரும் ஜனாதிபதியுடன் உரிய பேச்சுவார்த்தைகளை நடத்தி தோட்ட மக்களுக்கு 7 பேர்ச்சஸ் காணியுடன் தனிவீடுகளை அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எதிர்கால மலையக சந்ததியினர் இந்த நாட்டில் காணியுரிமை அற்றவர்களாக, இரண்டாம் தர பிரஜையாக வாழும் நிலைமையை மாற்றியமைக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். இல்லையேல் மலையக சமூகத்தின் முன்னேற்றகரமான எதிர்காலம் கேள்விக்குறியே.

**கே.எஸ்.சரன்**

## தீபாவளி விழா – 2013

ஊவா மாகாண இந்து மன்றம் ஏற்பாடு செய்துள்ள தீபாவளி விழா பசறை நகரில் இடம்பெறவுள்ளது.

கெமிதிரிய, மகநெகும கிராமிய அமைப்புகள், ஊவா மாகாண அரசியல் பிரமுகர்கள், பசறை பிரதேச புத்திஜீவிகள் மற்றும் பொதுமக்களின் பங்கேற்புடன் நடைபெறும் இவ்விழாவில் சகலமத சமத்துவத்தையும், ஒற்றுமையையும் பிரதிபலிக்கும் வகையில் பசறை பிரதேச பாடசாலை மாணவ மாணவிகளின் கலாசார ஊர்வலமும் நடைபெறவுள்ளது.

இவ்விழா சிறப்புற அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்:- பசறை பிரதேச மண்டபம்
காலம்:- 01.12.2013
(ஞாயிற்றுக்கிழமை)
நேரம்:- காலை 10 மணி

ஊடக அனுசரணை உதய சூரியன்

## உதயசூரியன் சிறு விளம்பரம்

### சமையலாளர்கள் தேவை

வீட்டில் சமைப்பதற்கு இரண்டு ஆண் சமையலாளர்கள் தேவைப்படுகிறார்கள். நன்றாகச் சமைக்கத் தெரிந்த நடுத்தர வயதை உடைய ஆண்கள் விண்ணப்பிக்கலாம். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு. ☎: 077-2933866




## கண்ணாமூச்சி




இந்த படத்தில் உள்ள எழுத்துகளை கொண்டு குறைந்தது 12 வார்த்தைகளைக் கண்டறிய வேண்டும்... முயன்று பாருங்கள்

வார்த்தை விளையாட்டு

## சூப்பர் ரூப்பர்





01



02



03

இவருக்கு பொருத்தமான முகம் எது? கண்டுபிடியுங்கள்



என்னை யார் என்று தெரிகிறதா? கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்? இதற்கான விடையை 28 ஆம் பக்கம் பார்க்க...

### வாசகர்களின் கவனத்திற்கு!

உங்கள் பகுதியில் இடம்பெறும் சம்பவங்கள், சிறுகதை, கவிதை, கட்டுரை என அனைத்து விதமான ஆக்கங்களையும் எமது முகவரிக்கு அனுப்பிவையுங்கள். தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.

முகவரி:
உதய சூரியன்
ஏசியன் மீடியா பப்ளிகேஷன்
இல.68, எலிஹவுஸ்வீதி,
கொழும்பு 15.

மின்னஞ்சல்: thinaupcountry@yahoo.com

Fax: 0112540695

## வார்த்தைப் புதிர் - 84



### இடமிருந்து வலம்

01. மணல் பிரதேசம்.
02. தமிழ் மாதங்களில் ஒன்று.
03. இது குழப்பத்தை ஏற்படுத்துவது.
11. முத்தமிழில் ஒன்று.
14. அழகுக்கு இவள்தான் உதாரணம் கடைசி எழுத்து இல்லை.
15. கீரை, காய் தரும் மரம்.
22. கோயில் திருவிழாவில் முக்கியமான நிகழ்ச்சி.
23. வியாபாரத்தின் நோக்கம்.
24. அரசன்.

### வலமிருந்து இடம்

07. பஞ்சபாண்டவர்களின் ஒருவன்.
08. விண்ணில் தெரியும் வர்ணஜாலம்.
10. இயற்கையான இனிப்பு.
13. கோவிலில் இருக்கும்.
18. வேகம்.
21. நாயன்மார்களில் ஒருவர்.
25. புலி பசித்தாலும் இதைத் தின்னாது.
26. கம்பு கண்டை.

### மேலிருந்து கீழ்

01. யானையை வழி நடத்துபவன்
04. இதை புனைபவர் கவிஞர்.
05. சதுரம், செவ்வகம் போல இதுவும் ஒரு உருவம்.
07. எந்நேரமும் என்று பொருள்படும்.
11. கலகம் செய்வதில் வல்லவர்.
12. பாகிஸ்தானில் இருந்து பிரிக்கப்பட்ட அண்டைய தேசம்.
16. ஒரு போக்குவரத்து வாகனம்.
19. கூடுவது.
20. முக்கனிகளில் ஒன்று.
21. வில்லில் இருந்து புறப்படுவது.

### கீழிருந்து மேல்

06. வரம் தரும் பெண் (குழம்பியுள்ளது).
09. நாயகனின் எதிரி.
10. இவர் ஒரு தென்னிந்திய இசையமைப்பாளர்.
13. அம்மாவின் தங்கை.
15. இந்தியாவில் உள்ள ஒரு பிரதேசம். (கடைசி எழுத்து இல்லை)
17. ஆண்களை மரியாதையாக அழைக்கும் அடை மொழி.
26. இது கை பழக்கத்தில் வருவது. (குழம்பியுள்ளது)





# சச்சினுக்கு கோவில்



இந்திய கிரிக்கெட்டின் கடவுள் என்று ரசிகர்களால் வர்ணிக்கப்படுபவர் சச்சின். இவரது ஓய்வு அறிவிக்கப்பட்டபோது ரசிகர்கள் கண்ணீர் விட்டு அழுதனர். பெரும் மனவுளைச்சலுக்கு ஆளாகினர். இதற்கெல்லாம் ஒருபடி மேலாக சச்சின் டெண்டுல்கரின் தீவிர ரசிகரான மனோஜ் திவாரி என்பவர் சச்சினுக்கு கோவிலே எழுப்பிவிட்டார். பிகாரைச் சேர்ந்த பிரபல நடிகரும் பாட்கரும் தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளருமான மனோஜ் திவாரியே சச்சினுக்காக பாபுஹ்வா மாவட்டத்தின் அட்ரவுலியா கிராமத்தில் கோவில் அமைத்து வருகிறார்.

பீகாரின் கய்மர் மாவட்டத்தில் உள்ள அடர்வாலியா கிராமத்தில் 4 ஏக்கர் நிலத்தில் இந்தக் கோவில் அமைக்கப்பட்டு வருகிறது. கோவில் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் அண்மையில் இங்கு சச்சினுக்கு பளிங்கினால் ஆன முழு உருவச் சிலை வேத மந்திரங்கள் வாசிக்கப்பட்டு அண்மையில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

ராஜஸ்தானிலுள்ள நத்வார என்ற இடத்தில் சுமார் 850 கிலோ எடையில் இந்திய மதிப்புப்படி ரூ.8.5 இலட்சம் ரூபா செலவில் இந்தச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

10 அடி உயரமுள்ள பீடத்தில் இந்தச் சிலை பொருத்தப்பட்டுள்ளது.

வேத மந்திரங்கள் முழங்க பிரதிஷ்டை செய்யப்பட்ட இந்தச் சிலைக்கு பூசாரிகள் சிறப்பு பூஜை வழிபாடுகளையும் நடத்தியுள்ளனர்.

சுமார் 6 ஆயிரம் சதுர அடி நிலப்பரப்பில் இந்திய மதிப்பின்படி 7 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு கோவில் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்தக் கோயில் பற்றி மனோஜ் திவாரி தெரிவிக்கையில்:

2011 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற்றபோது நம் நாட்டுக்கு இந்த பெருமையை பெற்றுத் தந்த கிரிக்கெட் வீரர்களுக்கு ஒரு கோயிலைக் கட்ட வேண்டும் என்று தீர்மானித்தேன். இதற்காக 6000 சதுர அடி நிலத்தில் 2 வருடங்களில் இந்த கோவிலை கட்டி முடித்து விட்டேன். கிரிக்கெட் மட்டை மற்றும் பந்துடன் கோபுரத்தின் உச்சி அமைக்கப்பட்டுள்ளது.

உள்ளே கையில் கிரிக்கெட் மட்டையுடன் சச்சின், தோனி மற்றும் யுவராஜ் சிங் ஆகியோரின் முழு உயர பளிங்கு சிலைகள் வைக்கப்படவுள்ளன.

2014 ஆம் ஆண்டில் இந்தக் கோவிலை திறப்பதற்கான ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளேன்.

கிரிக்கெட்டை நேசிக்கும் அனைவருக்கும் இது பொது இடமாக அமையும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## UCMAS மனக்கணித முறை சர்வதேச போட்டிகள் - 2013

2013 டிசம்பர் 1ஆம் திகதி மலேசியாவில் சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருக்கும் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றுவதற்காக நாடெங்குமுள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களையும் சேர்ந்த 4 வயது தொடக்கம் 14 வரையான வயதுப் பிரிவைச் சேர்ந்த சுமார் 40 மாணவர்களை ஜெனிசிஸ் (Genesis Academy Lanka Pvt Ltd. UCMAS National Franchisee BOI அங்கீகாரம் பெற்ற நிறுவனம்) முதன்முறையாக மலேசியாவுக்கு அழைத்துச் செல்லவுள்ளனர்.

இலங்கையிலுள்ள இவ்வாறான கல்வி நிலையங்களில் சுமார் 1000 மாணவர்கள் UCMAS திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாகிய எண்கூட்டல் மற்றும் மனக்கணிதம் நெறிகளில் பயின்றுவருகின்றனர். உலகளாவியரீதியில் UCMAS அமைப்பால் மட்டுமே நடத்தப்படும் சர்வதேச தரப்படுத்தல் பரீட்சைகளுக்கான (IGE) நெறி ஆலோசகர்கள் மற்றும் தலைமை பரீட்சை ஏற்பாட்டாளருடன் சுமார் 40 மாணவர்கள் இந்த சர்வதேச போட்டியில் இலங்கையிலிருந்து பங்குபற்றுகின்றனர்.

எமது வெற்றிகரமான படிமுறையிலான வழிகாட்டல் மற்றும் ஒருமுகப்படுத்தப்பட்ட சிந்தனை, தெளிவாக புரிந்துகொள்ளல், புகைப்படஞாபக சக்தி, வேகமும் துள்ளியமும் தெரிந்துகொள்ளல், படைக்கும் திறன் தற்சார்பு நிலை, தன்னம்பிக்கை, கவனித்தல் ஆகியன சிறாரின் மனோபலத்தின் உள்ளார்ந்த திறனை வெளிக்கொணர்வதுடன் அவர்களின் பகுத்தாய்வுத் திறமைகளையும் அபிவிருத்தி செய்யும்.

## Genesis Academy Lanka (Pvt) Ltd.

"குழந்தைகளே வாருங்கள் மேதைகளாக வழி அமைப்போம்"

UCMAS உங்களை நாடி நாடு முழுவதும் வருகின்றது. கற்போம் பயன்பெறுவோம்.

பெற்றோர்களே! உங்கள் குழந்தைகளுக்கு சரியான கல்வியை இன்றே வழங்குங்கள்.

யாழ்ப்பாணம், வத்தளை, மன்னார், மருதானை, அனுராதபுரம், நிந்தவூர், வெள்ளவத்தை, கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு, வலிகாமம், கம்பஹா, அம்பாறை, மாத்தளை, மாலபே, ஹோமாகம, காலி.

No: 60/2, Hampden Lane, Wellawatta, Colombo -06 Tel: 0112366818 Email: info@ucmaslanka.com

# எளிமையை விரும்பிய இளவரசர் சார்ள்ஸ்



பொதுநலவாய மாநாட்டுக்காக இலங்கைக்கு 54 நாட்டுத் தலைவர்கள் அழைக்கப் பட்டிருந்தாலும் அவர்களுள் மிக முக்கியமானவராக கணிக்கப்பட்டவர் பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ்.

அவரை எப்படி வரவேற்பது? எங்கே தங்க வைப்பது? எப்படி உபசரிப்பது? என தீவிர ஏற்பாடுகளும் ஆலோசனைகளும் நடைபெற்ற போதும் இலங்கை வந்த இளவரசர் எந்தவிதமான ஆடம்பரங்களோ ஆர்ப்பாட்டங்களோ இல்லாமல் மிக எளிமையாக நடந்துகொண்டதாக தெரியவருகிறது.

எளிமையாக மட்டுமல்ல சாதாரணமானவர்களுக்கும் கூட மரியாதை செலுத்தும், அங்கீகரிக்கும் உயரிய பண்பை இளவரசரிடம் அவதானிக்க முடிந்ததாக இளவரசர் சார்ள்ஸ் தங்கியிருந்த ஹோட்டலின் உரிமையாளரும் ஊழியர்களும் மகிழ்ச்சி பொங்க கூறுகின்றனர்.

இளவரசர் சார்ள்ஸும் அவரது துணைவியார் கமிலாவும் தங்குவதற்காக கொழும்பு ரொஸ்மிக்ட் பிளேஸிலுள்ள டின்டஜன் ஹோட்டல் (பண்டாரநாயக்காவின் இல்லம்) ஒதுக்கப்பட்டிருந்தது.

கடந்த 14 ஆம் திகதி இளவரசர் சார்ள்ஸும் துணைவியார் கமிலாவும் இலங்கை வந்தடைந்தனர்.

அவர்களுடன் சமையற்காரர், வைத்தியர் ஒருவர் மற்றும் ஏனைய நான்கு உதவியாளர்களும் உடன் வந்தனர். இவர்களுக்காக டின்டஜன் விடுதியில் 10 அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

இளவரசருக்கு மேல் மாடியில் சவுத்ஈஸ்ட் சூட் ஒதுக்கப்பட்டிருந்தது.

இளவரசர் ஏஸியை விரும்பவில்லை. ஜன்னல்கள் திறந்துவிடப்பட்டு இயற்கைக் காற்று அறைக்குள் வருமாறு செய்யப்பட்டது.

14 ஆம் திகதி இளவரசரின் பிறந்த தினம் என்பதால் ஹோட்டலின் சார்பில் பிரமாண்டமான கேக் அவருக்கு வழங்கப்பட்டது. கேக் வெட்டிய இளவரசர் அதனை சுவை பார்த்ததுடன் குழுமியிருந்த ஹோட்டல் ஊழியர்களுக்கே அதனை பகிர்ந்தளித்து பிறந்தநாளைக் கொண்டாடினார்.

இளவரசருக்காக இரசாயனம் இடப்படாத உணவுகள், மீன், இறைச்சி வகைகள் அவரது நாட்டிலிருந்தே கொண்டுவரப்பட்ட போதும் உணவுதயாரிப்பின்போது இலங்கை சுவையூட்டிகளே பயன்படுத்தப்பட்டன.

உணவு தயாரிப்பிற்காக தனியான பாத்திரங்கள் கொண்டுவரப்பட்ட போதும் இலங்கை பாத்திரங்களிலேயே சமையல் செய்யுமாறு இளவரசரும் கமிலாவும் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவ்வாறே சமைக்கப்பட்டது.

உணவு பரிமாறும் அல்லது கொண்டு வந்து கொடுக்கும் ஒவ்வொரு ஊழியருக்கும் இளவரசர் நன்றி தெரிவிக்கத் தவறுவதில்லை. எத்தனை தடவைகள் அறைக்குள் சென்றாலும் தலைசாய்த்து நன்றியை தெரிவிப்பார். அதுமட்டுமல்ல இளவரசர் எதிர்ப்படும் சாதாரண ஊழியர்களுக்குக்கூட புன்னகையோடு வாழ்த்து தெரிவிப்பார் என ஹோட்டல் ஊழியர்கள் தெரிவித்துள்னர். அது கமிலா தங்குவதற்காக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பயன்படுத்திய அறை ஒதுக்கப்பட்டிருந்தது. அவருக்குப் பிடித்த சிவப்பு ஒரேஞ்ச், வெள்ளை, நிற மலர்களால் அறை அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.

ஹோட்டலிருந்து விடைபெறும் தருணத்தில் ஹோட்டல் ஊழியர்கள் அனைவரோடும் சேர்ந்து இருவரும் புகைப்படம் எடுத்துக் கொள்ளவும் தவறவில்லை.

ஜி.வி.எஸ்.





## பாதுகாப்புத் தேடி அடைக்கலம் புகுந்த இடத்திலேயே பாலியல் வன்கொடுமைகளா?

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது இவ்வாறு இருக்க இச் சிறுவர் இல்லத்தில் துஷ்பிரயோகம் இடம்பெற்றதான தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்து அங்கிருந்த பல சிறுவர்கள் வெளியேற்றப்பட்டிருந்தனர். அவ்வாறு வெளியேறியிருந்த சிறுவனில் ஒருவனே தற்போது முறைப்பாடு செய்துள்ளான். இன்னும் பல சிறுவர்கள் வெளியில் இருப்பதால் அவர்களையும் கண்டுபிடித்தால் இன்னும் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை இந்த சிறுவர் இல்லத்தில் இருந்து சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகளினால் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்த 21 சிறுவர்களில் 19 பேர் வவுனியா சிறுவர் நன்னடத்தைப் பிரிவினரிடம் நீதிமன்றத்தினால் ஒப்படைக் கப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் முல்லைத்தீவில் உள்ள அரச அனுமதி பெற்ற சிறுவர் இல்லம் ஒன்றில் வைத்துப் பராமரிக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த சிறுவர்களில் 8 பேர் 26 ஆம் திகதி நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய அவர்களுடைய பெற்றோரிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த சிறுவர்கள் பாடசாலை சென்று கல்வி கற்பதற்கு வசதியாக சைக்கிள்கள் மற்றும் புத்தகங்கள், உபகரணங்கள் என்பனவும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினரால் வழங்கப்பட்டிருக்கின்றது.

நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு நிலைய பொறுப்பதிகாரி ரி.மனோகரராஜா கூறுகையில்:- எமது சட்டவிதிகளை மீறி அட்டமஸ்கட சிறுவர் பராமரிப்பு நிலையம் செயற்பட்டது. அங்கு பல உரிமை மீறல் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளமை தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. வவுனியா மாவட்டத்தில் உள்ள சிறுவர் இல்லங்களும் இனி தொடர்ச்சியாக கவனிக்கப்பட்டு தேவையற்ற இல்லங்களும், முறைகேடாக இயங்கும் இல்லங்களும் மூடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அட்டமஸ்கடவில் இருந்த 8 சிறுவர்கள் தற்போது உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளனர். விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் ஏனைய சிறுவர்களும் நீதிமன்ற உத்தரவுக்கமைய ஒப்படைக்கப்படுவார்கள் எனத் தெரிவித்தார்.

சமூகத்தில் பொறுப்பு வாய்ந்த கருணை போதிக்கும் ஒருவரது இல்லத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் உரிமை மீறல்களுக்கு நீதியான விசாரணை நடத்தப்பட்டு தண்டனை வழங்கப்படுவதன் மூலமே இனிவரும் காலங்களிலாவது இவ்வாறான சம்பவங்களை கட்டுப்படுத்தலாம் என்பதே சமூகத்தின் எதிர்பார்ப்பாகும்.

-கே.வாசு-




# 31 நாய்களுடன் அமெரிக்க பெண் தற்கொலை



அமெரிக்காவில், விலங்குகள் பாதுகாப்பு அமைப்பை நிறுவி, செல்லப் பிராணிகளுக்கு ஆதரவு அளித்து வந்த பெண் தான் வளர்த்த 31 நாய்களை கொன்று தானும் தற்கொலை செய்துகொண்டார்.

அமெரிக்காவின், ஒகாயோ மாகாணத்தைச் சேர்ந்தவர், சான்ரா லேர்டமைன். சிறு வயது முதலே வீட்டு விலங்குகளை அதிகம் நேசிக்கும் இவர், ஏராளமான நாய்கள் மற்றும் பூனைகளை வளர்த்து வந்தார்.

செல்லப் பிராணிகளை அதிகம் நேசித்த சான்ரா, விலங்குகள் பாதுகாப்பு அமைப்பு ஒன்றைத் தொடங்கி, தெருக்களில் திரியும் நாய்கள் மற்றும் பூனைகளை எடுத்து வளர்த்தார். சான்ரா யாருடைய துணையும் இல்லாமல் அனைத்து பிராணிகளையும் தானே கவனித்துக் கொள்வதை பழக்கப்படுத்திக் கொண்டார். வயது முதிர்வின் காரணமாக, கடந்த சில மாதங்களாக, மன இறுக்கத்தால் பாதிக்கப்பட்ட இவர், தனக்குப் பின் அவர் வளர்த்த பிராணிகளின் நிலை பற்றி கவலை கொள்ளத் தொடங்கினார்.

இந்நிலையில், சான்ரா தான் வளர்த்த, 31 நாய்களையும் தன் காரில் ஏற்றி, தானும் விஷம் குடித்து, காரின் கதவுகளை இறுக மூடிவிட்டார். விஷத்தின் பாதிப்பால் சான்ரா காரிலேயே இறந்துவிட்டார். காரின் கதவுகள் மூடப்பட்டதால், அதில் அடைக்கப்பட்டிருந்த, 30 நாய்கள் பரிதாபமாக பலியாயின. ஒரே ஒரு நாய் மட்டும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியது. அதிகாலை சான்ராவின் வீட்டிற்கு வந்த அவரின் நண்பர், சான்ரா காரில் இறந்து கிடப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். இதுகுறித்து பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தார்.

பொலிஸார் காரை சோதனையிட்டதில், சான்ரா எழுதிய கடிதம் ஒன்று கிடைத்தது. அதில், தனக்குப் பின் இந்தப் பிராணிகளை கவனிக்க யாரும் இல்லாததால், தான் வளர்த்த பிராணிகளுடன் தற்கொலை செய்து கொள்வதாக அதில் எழுதியிருந்தார். விலங்குகளுக்கு எதிரான கொடுமைகளை எதிர்த்து குரல் கொடுக்கும் விலங்குகள் பாதுகாப்பு அமைப்பை நிறுவிய சான்ராவின் தற்கொலை, அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இத்தனை ஆண்டுகள் தான் வளர்த்த நாய்களையே சான்ரா கொன்றுவிட்டு, தானும் தற்கொலை செய்து கொண்டது, வேதனை அளிப்பதாக அவரின் கணவர் மற்றும் நண்பர்கள் தெரிவித்துள்ளனர்.

# இது வித்தியாசமான ஆடை



விலங்குகள் பறவைகள் போன்றவற்றை வேட்டையாடுவதை தடை செய்யும் வகையிலும் சைவ உணவு வகைகளை சாப்பிடுவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் சமீபத்தில் இந்தியாவின் ஐதராபாத்தில் ஒரு கண்காட்சி நடத்தப்பட்டது. விலங்குகள் நல அமைப்பான பீட்டா சார்பில் இந்த கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் பங்கேற்ற பெண்கள் வழக்கமான உடைகளை அணிவதற்கு பதிலாக, தாவரங்கள், காய்கறிகள் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட வித்தியாச மான உடைகளை அணிந்து வந்து அனைவரையும் ஆச்சரியப்படுத்தினர். உணவுக்காக விலங்குகள், பறவைகளை வேட்டையாடக் கூடாது என்பதை பொது மக்களுக்கு வலியுறுத்துவதற்காகத்தான் இப்படி ஒரு வித்தியாசமான கண்காட்சிக்கு ஏற்பாடு செய்தோம் என்றனர் பீட்டா அமைப்பினர்.

# பேஸ்புக் ரசிகரின் வினோத சவால்




பேஸ்புக் காய்ச்சலால் பீடிக்கப்படாதவர்கள் இல்லை என்று சொல்லும் அளவிற்கு இன்று வயது வேறுபாடு இன்றி அனைவரையும் தன்பக்கம் ஈர்த்துள்ளது.

அதேபோல டேனியல் ஷா என்பவரையும் விட்டுவைக்காத பேஸ்புக் காய்ச்சலினால் பேஸ்புக்கில் தன்னுடன் நண்பர்களாக இருக்கும் 730 நபர்களை ஒரு வருடத்திற்குள் சந்திப்பதாக சபதம் எடுத்துள்ளார்.

அதாவது சராசரியாக நாள் ஒன்றிற்கு 2 நண்பர்கள் வீதம் சந்திக்க வேண்டும். கடந்த ஆகஸ்ட் மாதம் சபதம் எடுத்த அவர் இதுவரை 129 நபர்களை சந்தித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இப்படியும் ஒரு சிகையலங்காரம்

தலை முடி அதிகமாக வளர்ந்து விட்டால் சிகை அலங்கார கடைகளுக்கு சென்று அவற்றை வெட்டுவதுதான் வழக்கமான நடைமுறை. ஆனால் சீனாவில் உள்ள குறிப்பிட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் முடியை வெட்டுவதற்கு பதில் தீயால் பொசுக்கியும் சிகை அலங்காரம் செய்கின்றனர். சீனாவின் பல இடங்களில் இதற்கான கடைகள் உள்ளன. கத்தரி, கத்தி போன்ற உலோகங்களை தீயில் சூடாக்கி பின் முடியை பொசுக்குவதுதான் இங்கு பின்பற்றப்படும் நடைமுறை. இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள வாய் வெய்பு என்ற முதியவர் கூறுகையில்:- சில ஆண்டுகளுக்கு முன்வரை இந்த தொழிலுக்கு கிராக்கி இருந்தது. இப்போது குறைந்துவிட்டது. வயதானவர்கள் மட்டுமே இப்போது கடைக்கு வருகின்றனர். இளைஞர்கள் வருவது இல்லை. இதனால் பாரம்பரியமான இந்த தொழில் மெல்ல மெல்ல அழிந்து கொண்டே வருகிறது என கவலைப்படுகிறார்.





கிராபிக்ஸ் :- அபி

# ஜனாதிபதியை மச்சான் என்றழைத்த மேர்வின்

கடந்த 18 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது 68 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். ஜனாதிபதியின் பிறந்த நாளை முன்னிட்டு நாட்டின் பல பாகங்களிலும் விஷேட பூஜைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ஜனாதிபதியின் அதி விசுவாசியான அமைச்சர் மேர்வினும் களனி விஷ்ணு கோவிலில் ஜனாதிபதிக்கு ஆசி வேண்டி விஷேட பூஜையொன்றை ஏற்பாடு செய்திருந்தார். ஜனாதிபதியும் இப்பூஜையில் மாலை 5.30 மணிக்கு கலந்துகொள்வதாக உறுதியளித்திருந்தார். பூஜைக்கான ஏற்பாடுகள் எல்லாவற்றையும் செய்துவிட்டு மேர்வினும் அவரது சகாக்களும் ஜனாதிபதியின் வருகைக்காக காத்திருந்தனர். நேரம் 5.30 மணியை தாண்டிச் சென்றுகொண்டிருந்தது.

காத்திருந்து அலுப்புத் தட்டிப்போன மேர்வின் சில்வா ஜனாதிபதியின் நெருங்கிய பாதுகாப்பு அதிகாரியான நெவிலுக்கு அழைப்பை ஏற்படுத்தி ''ஏன் இவ்வளவு காலதாமதம்? நாங்கள் இங்கு பார்த்துக் கொண்டிருக்கின்றோம்'' எனக் கூறியுள்ளார். ''நிறைய இடத்தில் விஷேட பூஜைகள் இடம்பெறுகின்றன அமைச்சர் அவர்களே'' என பாதுகாப்பு அதிகாரி நெவில் பதிலளித்துள்ளார். நேரம் 6.30..., 7..., 8..., 8.30 என வேகமாக கடிகார முள் சுழன்று கொண்டிருந்தது. ஆனால், ஜனாதிபதி வருவதற்கான எவ்வித அறிகுறிகளும் இல்லை. பொறுமையை இழந்துபோன அமைச்சர் மேர்வின் மறுபடியும் அழைப்பை ஏற்படுத்தி ''என்ன மச்சான் செய்யுற? நான் எத்தனை மணியில் இருந்து காத்துக் கொண்டிருக்கின்றேன்.'' என சற்று கடுப்பாகக் கூறியுள்ளார். எதிர்ப்பக்கத்தில் நெவிலிடம் இருந்து எவ்வித பதிலும் இல்லை. பதிலாக தொடர்பு துண்டிக்கப்பட்டது. அமைச்சர் மேர்வின் அதிர்ச்சியடைந்தார். பூஜையை நடத்தவும் முடியாமல் ரத்து செய்யவும் முடியாமல் சரி இன்னும் கொஞ்ச நேரம் பார்ப்போம் என ஜனாதிபதியின் வருகைக்காக காத்திருந்தார்.

இரவு 9.30 மணியளவில் ஜனாதிபதி கோவிலுக்கு வந்து சேர்ந்தார். காரைவிட்டு இறங்கும் போதே நீ எனக்கு மச்சான் ஆகிவிட்டாயா? என நக்கலாகக் கேட்டுள்ளார். ஜனாதிபதியின் இக்கூற்றால் மேர்வின் சில்வா திக்குமுக்காடி போயுள்ளார். மேர்வின் அடிக்கடி நெவிலுக்கு அழைப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்ததால் ஜனாதிபதியே அவருடைய கைப்பேசியை எடுத்து கதைக்க முயன்றுள்ளார். அதற்குள் மச்சான் என மேர்வின் தொடங்க அழைப்பை ஜனாதிபதி துண்டித்துள்ளார். அழைப்பில் யார் இருக்கிறார் என்பது தெரியாமல் பேசியது, அதற்கு பிறகுதான் மேர்வின் சில்வாவிற்கு புரிந்தது.

இறுதியில் இந்த ஜென்மத்தில் மச்சான் ஆக முடியாமல் போய்விட்டது. அடுத்த ஜென்மத்திலாவது அது நடக்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திப்பதாக அமைச்சர் மேர்வின் அசடுவழிய சமாளித்தாராம்.

**தாசன்**

## என் மகன் ஆவியாக எங்களுடன் வாழ்கிறான்

## அமெரிக்க தந்தையின் கூற்றால் பரபரப்பு!





புயலில் சிக்கி உயிரிழந்த 9 வயது மகன் இன்னும் தங்களுடன் ஆவியாக வாழ்ந்து வருவதாக அமெரிக்காவின் ஒக்லஹோமாவில் வசிக்கும் குடும்பஸ்தர் ஒருவர் வழங்கிய தகவலால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவின் தென் மாநிலமான ஒக்லஹோமாவில் கடந்த மே மாதம் 20 ஆம் திகதி புயலில் சிக்கி நிக்கொலஸ் மெக்காபே என்ற சிறுவன் உயிரிழந்தான்.

அச்சிறுவன் கல்விகற்ற பாடசாலையின் கட்டிடத்தை புயல் தாக்கியதால் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

அதன்பின்னர் நிக்கொலஸின் மைத்துனியான சிறுமியொருவர் எடுத்துக்கொண்ட புகைப்படத்தில் அச்சிறுமிக்குப் பின்னால் இன்னுமொரு உருவம் இருப்பது அவதானிக்கப்பட்டது. அந்த உருவம் புயலில் சிக்கி உயிரிழந்த தன்னுடைய மகன்தான் என நிக்கொலஸின் தந்தை ஸ்கொட் மெக்காபே அதிர்ச்சி தரும் தகவலை வெளியிட்டுள்ளார்.

தன்னுடைய மகன் ஆவியாக இன்னும் தங்களோடு வாழ்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகன் எங்களோடு இருப்பதை என்னால் உணர முடிகிறது. இதனை நான் பாதுகாப்பாக உணர்கிறேன். எனக்கு மனநோய் இருப்பதாக பலர் கூறலாம். ஆனால் இந்தப் புகைப்படம் உண்மையை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது என அவர் மேலும் விபரித்துள்ளார்.

நிக்கொலஸ் ஆவியாக வலம் வருவதாக அறிந்த அவருடைய நண்பர்கள் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும் இதனால் அவர்களுக்கு உள ரீதியான மருத்துவம் வழங்கப்பட வேண்டும் என்றும் பாடசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

## இந்தத் தண்டனை போதுமா?

தன்னுடைய 10 வயது மகளை நிர்வாணமாக படம்பிடித்து பல நாட்களாக துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் சாரதியான தந்தைக்கு 100 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி பியசீலி விக்ரமசிங்கவே மேற்கண்ட தீர்ப்பை கடந்த திங்கட்கிழமை வழங்கியதுடன் குற்றவாளியான தந்தைக்கு 90 ஆயிரம் ரூபா தண்டமும் ஒரு இலட்சம் ரூபா நட்டஈடு வழங்குமாறும் உத்தரவிட்டார்.

சந்தேக நபரான தந்தைக்கு எதிராக விதிக்கப்பட்ட 12 குற்றச்சாட்டுகளிலும் அவர் குற்றவாளியாக நீதிமன்றத்தினால் இனங்காணப்பட்டார்.

தன்னுடைய மகளுக்கு பாதுகாப்பாக இருக்கவேண்டிய தந்தையே துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி இருப்பதால் அதனை தெளிவுபடுத்துவதற்கு சிங்களத்தில் வார்த்தைகள் இல்லை என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

தினக்குரல்
Voice of Students
இலவச இணைப்பிதழ்
வெள்ளி தோறும்

# வித்யாதரம்

கல்வியால் ஆகாதது ஒன்றுமில்லை

## க.பொ.த.(சா/த ) மாணவர்களுக்குரியது




### பகுதி - I

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

(1) தாவர,விலங்குக் கலங்கள் இரண்டிலும் காணப்படும் பொதுவான பகுதிகள்
1. கரு,குழியுவுரு,முதலுருமென்சவ்வு
2. கரு,குழியவுரு,மையப்புன்வெற்றிடம்
3. மையப்புன்வெற்றிடம்,கரு,பச்சையுருமணி
4. கலச்சுவர்,முதலுருமென்சவ்வு,மையப்புன்வெற்றிடம்

(2) செலுலோசினால் ஆக்கப்படாத கலச்சுவர் கொண்ட அங்கிக்கூட்டம்
1. அல்கா 2. பங்கசு
3. பிரியோபைற்றா 4. வித்து முடியிலித் தாவரம்

(3) செங்குழியம் அழிவடைவது
1. என்பு மச்சையில் 2. சிறுநீரகத்தில்
3. சிறுகுடலில் 4. ஈரலில்

(4) மேற்புற மேற்றோலில் இலைவாய்கள் கொண்ட தாவரம்
1. நாகதாளி 2. தாமரை 3. ஐதரில்லா 4. வெண்டி

(5) ஒரு இழையமொன்றில் காணப்பட்ட கலங்களில் பின்வரும் இயல்புகள் காணப்பட்டன.
a. உயிரற்றகலம்
b. கலத்தின் சுவர் முழுமையாக தடிப்படைந்து காணப்பட்டது.
c. குழியவுரு கலத்தின் சிறிய பகுதிக்கு மாத்திரம் எல்லைப்படுத்தப்பட்டுள்ளது.
மேலே குறிப்பிடப்பட்ட இயல்புகளைக் கொண்ட இழையம்
1. வல்லுருக்கலவிழையம் 2. ஒட்டுக்கலவிழையம்
3. புடைக்கலவிழையம் 4. கடற்பஞ்சுப்புடைக் கலவிழையம்

(6) **சரியான கூற்றைத் தெரிவு செய்க.**
1. உணவுச் சங்கிலியில் முதலாவது போசனை மட்டத்தில் எப்பொழுதும் ஒளித்தொகுப்பை மேற்கொள்ளும் அங்கிகளே காணப்படும்.
2. யாதேனும் சூழல் தொகுதியில் உள்ள விலங்கொன்று எப்பொழுதும் ஒரு போசனை மட்டத்திற்கே மட்டுப்படுத்தப்பட்டுக் காணப்படும்.
3. ஒரு போசனை மட்டத்திலிருந்து அடுத்த போசனை மட்டத்திற்கு சக்தி கடத்தப்படும் போது 10% சக்தியே வீணாகின்றது.
4. உணவுச் சங்கிலியில் இறுதி இணைப்பில் உள்ள அங்கிகளில் சக்தி ஒன்று சேர்க்கின்றன

(7) மனிதனின்
(A) விந்து உற்பத்திச் செயன்முறையானது வெப்பநிலைக்கு உணர்திறன் மிக்கதாகும்.
(B) அப்பாற் செலுத்தியினுள் சுக்கிலப்பாயம் சுரக்கப்படும்.
(C) சுக்கிலப்புடகத்தினுள் விந்துகள் களஞ்சியப்படுத்தப்படும்.
மேலே தரப்பட்ட விடைகளில் சரியானது/ சரியானவை
1. A மட்டும் 2. B மட்டும் 3. A,C மட்டும் 4. B,C மட்டும்

(8) இலிங்கம் இணைந்த பின்னடைவான பரம்பரையலகின் காரணமாகத் தோன்றும் நோய் நிலமைகள் இரண்டு
1. தலசீமியா,அரிவாட் போலி,செங்கலநிலை
2. தலசீமியா,ஈமோபீலியா
3. சிவப்பு பச்சை நிறக்குருடு,ஈமோபீலியா
4. அரிவாட் போலி செங்கலநிலை,சிவப்பு பச்சை நிறக்குருடு

(9) பின்வரும் செயன்முறைகளில் உயிர்க்கோலத்தின் காபன் வட்டத்தின் மீது செல்வாக்குச் செலுத்தாதது எது?
1. சுவாசம் 2. எரிமலை வெடிப்பு
3. தகனம் 4. மின்னல்

(10) நாடி,நாளங்கள் ஆகிய இரண்டினாலும் குருதி விநியோகிக்கப்படும் உடல் உறுப்பு
1. சுவாசப்பை 2. ஈரல் 3. சிறுநீரகம் 4. இரைப்பை

(11) பின்வரும் செயன்முறைகளைப் புரியும் சுரப்பிகள் முறையே,
(a) உடலில் உள்ள நீர்ச்சமநிலையை கட்டுப்படுத்துவது
(b) அனுசேபச் செயன்முறையை சீராக்குவது
(c) துணைப்பால் இயல்புகளைக் கட்டுப்படுத்துவது
1. கபச்சுரப்பி,தைரொயிட்டுச் சுரப்பி,சூலகம்
2. தைரொயிட்டுச் சுரப்பி, கபச்சுரப்பி,அதிரினல் சுரப்பி
3. இலஞ்சகான், சிறுதீவு, தைரொயிடடுச்சுரப்பி, சிறுநீரகம்
4. அதிரினல் சுரப்பி, கபச்சுரப்பி, சூலகம்

(12) நிறமூட்டப்படாத குருதி மாதிரியை வழுக்கியில் ஏற்றி நுணுக்குக்காட்டியினுடாக அவதானித்தபோது தெளிவாக அவதானிக்கக் கூடிய கலங்கள்
1. குருதிச்சிறுதட்டு 2. நியுற்றோபில் 3. செங்குழியம் 4. நிணநீர்குழியம்

(13) பின்வருவனவற்றுள் பல்பகுதியமாகக் காணப்படாத பதார்த்தம்
1. மாப்பொருள் 2. இறப்பர் 3. வைரம் 4. ரெஜிபோம்

(14) அயடீன் முனைவற்ற பதார்த்தமாகும். அதனை நீரினுள் இட்டு அதிக நேரம் கலக்கப்படும் போது இளம் கபிலக் கரைசல் கிடைத்தது. இக்கரைசலுக்கு மெலிதாக்கி சிறிதளவை இட்டுக் கலக்கும் போது நீரில் காணப்பட்ட அயடீன் மெலிதாக்கியினுள் சென்றதால் நீரின் நிறம் அற்றுப்போனது. அதேநேரம் மெலிதாக்கி கடும் கபில நிறமாக மாறியது. இது தொடர்பான திருத்தமான கூற்று
1. நீர் முனைவுக் கரைப்பானாகும் மெலிதாக்கி முனைவுக் கரைப்பானாகும்.
2. நீர் முனைவுக் கரைப்பானாகும் மெலிதாக்கி முனைவற்ற கரைப்பானாகும்.
3. நீர் முனைவற்ற கரைப்பானாகும் மெலிதாக்கி முனைவற்ற கரைப்பானாகும்.
4. நீர் முனைவற்ற கரைப்பானாகும் மெலிதாக்கி முனைவுக் கரைப்பானாகும்.

(15) மூலகமொன்று தொடர்பாக சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - மேற்பரப்பை தேய்த்து தூய்மையாக்கிய போது சாம்பல் நிற பளபளப்பான மேற்பரப்பு கிடைத்தது.

B - வளியில் நன்றாக வெப்பமேற்றிய போதும் தகனமடையவில்லை.

C - ஐதான ஐதரோகுளோரிக்கமிலத்துடன் வேகமாக தாக்கமடைந்தது.

மேலே தரப்பட்ட தகவல்களுக்குப் பொருந்தக் கூடிய உலோகம்

1. Zn 2. Mg 3. Pb 4. Cu

(16) சமதானி மூலகம் தொடர்பான டொல்டனின் அணுக் கொள்கையின் எக்கூற்று ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

1. பதார்த்தங்கள் அணு என்னும் சிறிய துணிக்கைகளினால் ஆக்கப்பட்டுள்ளது.
2. அணுவை ஆக்கவோ அழிக்கவோ முடியாது.
3. ஒரே மூலகத்தின் அணுக்கள் எல்லா விதத்திலும் ஒத்தவையாக காணப்பட்டாலும் வேறு மூலகங்களின் அணுக்கள் ஒன்றோடொன்று வேறுபட்டுக் காணப்படும்.
4. அணுக்கள் எளிய முழுவெண் விகிதத்தில் சேர்கின்றன.

(17) 23g சோடியத்தின் அணு எண்ணிக்கைக்குச் சமனாக அமையாதது
(Na=23,O=16,H=1,C=12,C1=35.5)

1. 18g நீரில் உள்ள நீர் மூலக்கூறுகளின் எண்ணிக்கை.
2. 44g காபனீரொட்சைட்டில் உள்ள மூலக்கூறுகளின் எண்ணிக்கை
3. 16g ஒட்சிசனில் உள்ள மூலக்கூறுகளின் எண்ணிக்கை
4. 36.5g ஐதரோக்குளோரிக் அமில மூலக்கூறுகளின் எண்ணிக்கை

18. பின்வரும் பதார்த்தங்கள் மூலகங்கள், கலவைகள், சேர்வைகள் என்ற ஒழுங்கில் அமைந்திருப்பது.

1. வளி,உருக்கு,கறியுப்பு 2. செம்பு,பித்தளை, நீர்
3. செம்பு,பித்தளை,உருக்கு 4.உருக்கு, செம்பு,கறியுப்பு

(19) பின்வரும் இரசாயன தாக்கங்களின் அடிப்படையில் விடையளிக்கவும்

1. $C_{(s)} + O_{2(g)} \longrightarrow CO_{2(g)}$

2. $Zn_{(s)} + 2HCI \longrightarrow ZnC1_{(aq)} + H_{2(g)}$

3. $CaCO_{3(s)} \longrightarrow CaO_{(s)} + CO_{2(g)}$

மேலே தரப்பட்டுள்ள இரசாயன தாக்கங்களின் தாக்க வகைகளை சரியாக குறிப்பிடும் ஒழுங்கு

1. பிரிகை,சேர்க்கை, ஒற்றை இடப்பெயர்ச்சி
2. சேர்க்கை, ஒற்றை இடப்பெயர்ச்சி,பிரிகை
3. பிரிகை,ஒற்றை இடப்பெயர்ச்சி, சேர்க்கை
4. சேர்க்கை, பிரிகை, இரட்டை இடப்பெயர்ச்சி

(20) X என்னும் உலோகத்தினுள் நான்கு துண்டுகளை பின்வரும் கரைசலுக்குள் தனித்தனியாகப் போடப்பட்டன.

a. $CaCl_2(aq)$ b. $CuCl_2(aq)$ c. NaCl (aq) d. $ZnCl_2$ (aq)

உலோகத்தை இட்டு சிறிது நேரத்தில் இரண்டு கரைசல்களில் வீழ்படிவுகள் தோன்றுவதைக் காணலாம். இங்கு X எனக் குறிப்பிடப்பட்ட உலோகம்

1. இரும்பு 2. மக்னீசியம் 3. பொற்றாசியம் 4.வெள்ளி

21. எளிய மின்கலமொன்றை அமைப்பதற்கு முயற்சி செய்த மாணவனினால் நாகம், செம்பு மின்வாய்கள் ஒன்றோடொன்று தவறுதலாக தொடுகையிடப்பட்டது. அதன்போது மாணவன் பெற்ற அவதானமும் அதற்கான காரணத்தையும் சரியாக விளக்குவது.

| அவதானம் | காரணம் |
|---|---|
| 1. நாகத்தகட்டிலிருந்து வாயுக் குமிழிகள் வெளியேறின. | ஐதான சல்பூரிக்கமிலம் மின்பகுக்கப்படுவதன் மூலம் மின்வாயிலிருந்து ஐதரசன் வாயு வெளியேறியது. |
| 2. செம்புத் தகட்டில் வாயுக் குமிழிகள் வெளியேறின. | நாகத்தகட்டிலிருந்து செம்புத்தகட்டிற்கு பாயும் இலத்திரனைப் பெறும் ஐதரசன் அயன்கள் ஐதரசன் வாயுவாக வெளியேறும் |
| 3. தாழியின் அடியில் கபிலநிற வீழ்படிவு தோன்றியது. | செம்புத்தகடு ஐதான சல்பூரிக்கமிலத்துடன் தாக்கமடைந்து வீழ்படிவை தோற்றுவித்தது. |
| 4. செம்பு,நாக மின்வாய்களுக்கருகில் வாயுக்குமிழிகள் காணப்பட்டன. | செம்புத்தகட்டிலிருந்து ஐதரசன் வாயுவும் Zn தகட்டிலிருந்து ஒட்சிசன் வாயுவும் வெளியேறியது. |



(ஐதான சல்பூரிக்கமிலம்)

(22) ஆய்வுகூடத்திலுள்ள பதார்த்தங்களில் வன்னமிலம்,வன்காரம் என்பவற்றுக்கு உதாரணமாக அமைவது முறையே

1. $HNO_3$,Mg(OH)2 2. CH3cOOH,Ca $(OH)_2$
3. HCl,Al $(OH)_3$ 4. $H_2$,$SO_4$,NaOH

(23) பின்வரும் செயற்பாடுகளில் வளிமண்டல கூறுகளின் மாற்றத்தின் மீது செல்வாக்குச் செலுத்தாத காரணி,

1. வாகனங்களில் ஏற்படும் எரிபொருள் தகனம்
2. யூரியா உரத்தின் உற்பத்திச் செயற்பாடு
3. ஈயம் கொண்ட பெற்றோலைப் பயன்படுத்தல்
4. கழிவுகளை மீள்சுழற்சிக்குட்படுத்தல்.

(24) சில பாறை வகைகள் கீழே தரப்பட்டுள்ளன.

a. களிக்கல் b. கிரனைட்டு c. மாபிள் d.சுண்ணாக்கல்

மேலே தரப்பட்டுள்ள பாறை வகைகளில் அடையல் பாறைக்கு உதாரணமாக அமைவன

1. b,c 2. b,d 3. a,d 4. c,d

(25) படத்தில் காட்டப்பட்டுள்ள அலை இயக்கத்தில் O என்னும் துணிக்கை அடுத்த கணத்தில் எத்திசையில் அசையும்.




1. A 2. B 3. C 4. D

(26) பின்வரும் தடைகள் அடங்கிய சுற்றில் அதிகளவு சமானத்தடை கொண்டது.




(27) நான்கு வில்லைகளும் அவற்றின் குவியத்தூரங்களும் கீழே தரப்பட்டுள்ளன.




மேலே தரப்பட்டுள்ள வில்லைகளில் கூட்டு நுணுக்குக்காட்டியில் பார்வைத்துண்டாக பொருள் வில்லையாக பயன்படுத்துவதற்குப் பொருத்தமானவை

1. A,B 2. B,D 3. D,B 4. C,D





# சருமத்தில் தேவையற்ற உரோமமா?


தனு ரசாக்

இன்றைய இளம் பெண்களுக்கே இன்று பாரிய சவாலாக இருக்கும் பிரச்சினை சருமங்களிலுள்ள தேவையற்ற உரோமங்கள் ஆகும். இவர்கள் இதை அகற்ற பெரும் சிரமப்படுகின்றார்கள். சிலர் இதனால் மனவேதனையும் அடைவதை நாம் பார்த்தும் இருக்கின்றோம் என்கிறார் நம் அழகுக் கலை நிபுணரான தனுரசாக்.

ஆயினும் இன்று வாக்சிங், திரெடிங், இன்ஸ்டன்ட் கிரீம், லேசர் என எத்தனையோ சிகிச்சைகள் உண்டு. ஆயினும், இவற்றில் எவற்றை நாம் சரியான வழியில் பின்பற்றலாம் என்பதே எமக்குள் உள்ள கவலை. இவ்வாறு சருமத்தில் உரோமங்கள் இருப்பதற்கான காரணம் ஹோர்மோன்களின் இயக்கம் சீராக இல்லாமல் போவதே ஆகும். உணவுப் பழக்கம், இயற்கைக்கு மாறான வாழ்க்கை முறை என வேறு காரணங்களும் உண்டு.

இதற்கு நாம் வீட்டிலே சில எளிய சிகிச்சைகளை செய்துகொள்ளலாம்.

பியூமிஸ் ஸ்டோனில் சந்தனத்தை தடவி வைக்கவும். உரோமங்களை நீக்க வேண்டிய பகுதியை முதலில் நன்கு கழுவித் துடைக்கவும். கடலை மா, பார்லி பவுடர், தேன் மூன்றும் 1 தேக்கரண்டி அளவு எடுத்து, சில துளிகள் தண்ணீர் விட்டுக் கெட்டியாகக் குழைத்து, உரோமம் நீக்க வேண்டிய சருமப் பகுதியில் அடர்த்தியாகத் தடவவும். அரை மணி நேரம் ஊற விட்டு, அது காய ஆரம்பித்ததும், தண்ணீரைத் தெளித்து, சந்தனம் தடவி வைத்த பியூமிஸ் ஸ்டோனால், மிக மென்மையாக உரோமத்தின் எதிர்த்திசையில் தேய்க்கவும். பிறகு அந்த இடத்தைக் கழுவவும். ஒரு நாள் விட்டு ஒரு நாள் செய்தால் முடி வளர்ச்சியின் வேகம் குறைந்து, வேர்க்கால்கள் பலவீனமடையும்.

இதேபோல் செய்யக்கூடாத சில விடயங்களும் இருக்கின்றன.

அவையாவன, கத்தரிக்கோல், ரேசர் போன்ற எந்தக் கருவியையும் உபயோகித்து உரோமங்களை நீக்க முயற்சிக்க வேண்டாம். அப்படிச் செய்தால், உரோமங்களை நீக்கிய இடம், தடித்து, கருப்பதுடன், உரோம வளர்ச்சியை மேலும் அதிகப்படுத்தும். இரசாயனம் கலந்த ஹேர் ரிமூவிங் கிரீம்களை உபயோகிப்பதும் உரோம வளர்ச்சியை மேலும் அதிகரிக்கச் செய்யும்.

கிரீம்களை உபயோகித்து உரோமங்களை அகற்றிய பின்னர் அந்த இடங்களை அப்படியே வறண்டு போகவிடாமல், வாரம் ஒரு முறை உச்சி முதல் பாதம் வரை எண்ணெய் வைத்து, ஊறிக் குளிப்பது மூலம் ஓரளவு நிவாரணம் காணலாம்.

பிளீச்சிங் செய்வதால் சருமத்தின் மெல்லிய உரோமங்கள் சரும நிறத்துக்கே மாறும். அதனால் உரோம வளர்ச்சி அத்தனை அசிங்கமாகத் தெரியாமல் தற்காலிகமாக மறைக்கப்படும்.

ஆகவே, எமது சருமத்திற்கு தீங்கு விளைவிக்காத முறைகளில் இச் சிகிச்சை முறைகளை செய்வதே சாலச் சிறந்தது ஆகும்.

**எஸ்.பிரியதர்ஷினி**

# சர்க்கரை சாப்பிட்டால் விக்கல் நிற்கும்



* பயணங்களில் சிலருக்கு வாந்தி ஏற்பட்டால் எலுமிச்சையைப் பிழிந்து, அந்த சாறை சில துளிகள் பருகினால், வாந்தி வருவது போன்ற உணர்வு விலகும்.
* விக்கலை விரட்ட எளிய வழி... ஒரு தேக்கரண்டி சர்க்கரையை அப்படியே வாயில் போட்டு விழுங்குங்கள். நாக்கில் திடீரென வந்து விழும் இனிப்புச்சுவையால், வாயில் இருக்கும் நரம்பு முனைகள் தூண்டப்படுகின்றன. இதனால் விக்கல் விலகுகிறது.
* ஒலிவ் எண்ணெய்யில் விற்றமின் ஈ சத்து இருக்கிறது. குளித்து முடித்ததும், சருமம் மென்மையாக இருக்கும் நேரத்தில் சுத்தமான ஒலிவ் எண்ணெயை லேசாக உடலில் தடவிக் கொண்டால், தோலின் ஈரப்பதம் பாதுகாக்கப்படும். எக்ஸிமா போன்ற சரும நோய்கள் வராது.
* வாய் துர்நாற்றத்தைத் தவிர்க்க நிறைய தயிர் சாப்பிட வேண்டும். நன்மை செய்யும் பக்டீரியாக்கள் தயிரில் நிறைய உண்டு. வாய் துர்நாற்றத்தை ஏற்படுத்தும் கெட்ட பக்டீரியாக்களை இவை அழிக்கின்றன. எனவே சுவாசம் இனிமையாகிறது.

# பாத எரிச்சல் நீங்க

சேற்றுப்புண் போன்ற பாதநோய்களுக்கு சிறந்த மருந்து லிஸ்டரின். ஆமாம். உலகெங்கும் மவுத்வாஷாக அறியப்படும் லிஸ்டரினில் ஆன்ட்டிசெப்டிக் மற்றும் நோய்த் தொற்றை அகற்றும் குணங்கள் உண்டு. ஒரு நாளைக்கு இரண்டு முறை 15 நிமிடங்கள் பாதத்தை லிஸ்டரின் கலந்த நீரில் ஊறவைத்தால் பாதநோய்கள் பக்கத்தில் வராது.

**பாத எரிச்சல் தீர்வதற்கு:-** மருதாணி இலைகளுடன் எலுமிச்சைச் சாறு கலந்து நன்கு அரைத்துப் பாதத்தில் பூசி அரை மணி நேரம் கழித்து சுடுநீரில் கழுவி வந்தால் பாத எரிச்சல் குறையும்.

**காலில் கட்டி குறைய:-** எருக்கின் பழுத்த இலை 5, வசம்பு 5 கிராம் இரண்டையும் சேர்த்து அரைத்து தண்ணீரில் கொதிக்க வைத்து பசைபோல் வந்தவுடன் இளம் சூடாகக் காலின் மேல்பாகத்தில் பூசி வர கட்டி குறையும்.

# பால் கொழுக்கட்டை

**தேவையான பொருட்கள்:**

பச்சரிசி-200 கிராம்
சர்க்கரை சேர்த்த பால்கோவா-50கிராம்
துருவிய தேங்காய்-1 முடி
அவல்-1 டேபிள் ஸ்பூன்
நெய்-1 டேபிள் ஸ்பூன்
ஏலக்காய்-2 பொடி செய்தது
உப்பு-1 சிட்டிகை

**செய்முறை:**

* அவலை பாலில் ஊற வைக்கவும். தேங்காய்த் துருவலை நெய்யில் வதக்கிக் கொள்ளவும்.
* பச்சரிசியை ஊறவைத்து அரைத்துக் கொள்ளவும்.
* வாணலியில் அரை டம்ளர் தண்ணீரை ஊற்றி சூடாக்கி நெய்யும், உப்பும் சேர்த்து மாவைக் கொட்டிக் கிளறி இளந்தீயில் வதக்கிக் கொள்ளவும்.
* மா கையில் ஒட்டாத பதம் வந்ததும் அதை அடுப்பிலிருந்து இறக்கி சிறு சிறு உருண்டைகளாக்கவும்.
* பாலில் ஊறிய அவல், பால்கோவா, தேங்காய்த் துருவல் எல்லாவற்றையும் கலந்து பூரணம் செய்து கொள்ளவும்.
* இப்போது மா உருண்டைகளை பூரிக்கு இடுவது போல உருட்டி, அதன் நடுவில் தயாராக இருக்கும் பால்கோவா பூரணத்தை வைத்து மூடிக் கொள்ளவும்.
* இப்படி பிடித்தக் கொழுக்கட்டைகளை எண்ணெய் தடவிய இட்லி தட்டில் அடுக்கி ஆவியில் வேகவிட்டு எடுக்கவும்.
* பால்கோவா சுவையுடன் இந்தக் கொழுக்கட்டையின் சுவை அபாரமாக இனிக்கும்.





பாடல்

படம் : இரண்டாம் உலகம்
இசை : ஹாரிஸ்ஜெயராஜ்
பாடல் : வைரமுத்து
பாடியவர்கள்: கோபால் ராவ்,
ஷக்திஸ்ரீ கோபாலன்

மன்னவனே என் மன்னவனே
நீ போன பாதை தேடித்தேடி வருவேன்
பனியிலே வெண் பனியிலே
விண்மீன தேடித்தேடி எங்க
அலைவேன்

உன் இணைக் கிளி வரும்வரை
ஒரு துணைக் கிளி நானடி
இதை உறவென்பதா பரிவென்பதா
பெயரே இல்லாத துயரமா
(மன்னவனே)

வருவது வருவது வருவது
துணையா சுமையா
தருவது தருவது தருவது
சுகமா வலியா
ஒரு உயிருக்கு இரு உடலா
இரு உடலுக்கும் ஒரு மனமா
என் நெஞ்சுக்குள்ள நெஞ்சுக்குள்ள
எரியிற நெனப்பிது
சொல்லித்தான் தெரியுமா
ஒரு வட்டத்துல வட்டத்துல
தொடக்கம் முடிவெது
சொல்லத்தான் முடியுமா
(ஓ... மன்னவனே)

பொழிவது பொழிவது பொழிவது
நிலவா வெயிலா
வழியுது வழியுது வழியுது
அதுவா இதுவா ஓ...
பொழிவது பொழிவது பொழிவது
நிலவா வெயிலா
வழியுது வழியுது வழியுது
அதுவா இதுவா
தினம் நடக்கிறேன் ஒரு திசையில்
மனம் கிடக்குதே மறு திசையில்
ஒரு உப்புக் கல்லு உப்புக் கல்லு
கடலுல விழுந்ததும்
உருவமும் கரஞ்சதே
இந்த ஒத்தப் பொண்ணு ஒத்தப்
பொண்ணு உனக்குள்ள விழுந்தது
மொத்தக் கத முடிஞ்சதே
(ஓ... மன்னவனே)

உன் இணைக் கிளி வரும்வரை
ஒரு துணைக் கிளி நானடி
இதை உறவென்பதா பரிவென்பதா
பெயரே இல்லாத துயரமா

## கிடு கிடுவென வளரும் ஊதா கலரு ரிப்பன் ஸ்ரீதிவ்யா!

சிவகார்த்திகேயன் நடித்த வருத்தப்படாத வாலிபர் சங்கம் படத்தில் நாயகியாக நடித்தவர் ஆந்திர அழகி ஸ்ரீதிவ்யா. அதற்கு முன்பே காட்டுமல்லி, நகர்புறம் என்ற இரண்டு படங்களில் இவர் நடித்துள்ளார். அப்படங்கள் கிடப்பில் கிடக்கின்றன. இந்த நிலையில் மூன்றாவதாக கமிட்டான படம் ஸ்ரீதிவ்யாவை பிரபலப்படுத்தி விட்டது.

அப்படத்தில் சிவகார்த்திகேயன், ஸ்ரீதிவ்யாவைப் பார்த்து பாடும் ஊதா கலரு ரிப்பன்தான் இப்போது காலேஜ் பையன்களின் பேவரிட் ரிங்டோனாக உள்ளது. அதனால், ஒரே படத்தில் யூத்தின் கனவுக்கன்னியாகி விட்டார் திவ்யா. மேலும் லட்சுமிமேனன், நஸ்ரியா உள்ளிட்ட சில நடிகைகள் கவர்ச்சி என்ற வார்த்தையை உச்சரித்தாலே முகம் சுளிப்பதால், சைவம், அசைவம் என இரண்டுவிதமாக நடிப்புக்கும் ஸ்ரீதிவ்யா தயாராக இருப்பதால், இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் நடிக்கும் 'பென்சில்', அதர்வா நடிக்கும் 'ஈட்டி', விஷ்ணு நடிக்கும் 'வீரதீரசூரன்' என பல படங்களில் இப்போது கமிட்டாகி நடித்து வருகிறார்.



## அரசியல் பிரவேசம் பற்றி கமல்!

விஸ்வரூபம் படத்திற்கு அரசு தரப்பில் கொடுத்த நெருக்கடி காரணமாக, எதிர்காலத்தில் கமலும் அரசியலுக்கு வரக்கூடும் என்று நினைத்த சில மீடியாக்கள் அவரிடம் அது சம்பந்தமான கேள்விகளை கேட்டு வருகின்றன. அதற்கு கமல், சினிமாவில் புதுமைகள் செய்து கொண்டிருக்க வேண்டும் என்பதில் மட்டுமே, என் எண்ணம் உள்ளது. மற்றபடி ஐந்து ஆண்டிற்கு ஒருமுறை, வாக்களிப்பதோடு என் அரசியல் பணி முடிந்து விட்டதாகவே கருதுகிறேன் என்று கூறியுள்ளார். மேலும், 'நடிகர்களில் பலருக்கு ஏற்படுவது போல் அரசியலுக்கு வர வேண்டும். நாட்டை ஆள வேண்டும் என்ற ஆசை ஒருபோதும் எனக்கு ஏற்பட்டதில்லை...' என்றும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.





# சினிமா

### ஹன்சிகாவுக்கு பதிலாக லட்சுமி மேனன்!

பாண்டியநாடு படத்தையடுத்து, திரு இயக்கத்தில், நான் சிகப்பு மனிதன் படத்துக்கு, ஹன்சிகாவைதான் ஹீரோயினாக, 'புக்' செய்யும் யோசனையில் இருந்தார் விஷால். ஆனால், பாண்டியநாடு படத்தில், லட்சுமி மேனனுடன் அவர் நடித்த காட்சிகள் இயல்பாக இருந்ததால், 'மீண்டும், அவரையே ஜோடி சேருங்கள்...' என்று, நலன் விரும்பிகள், 'அட்வைஸ்' செய்தனர். அதனால், புதிய படத்திற்கும், லட்சுமி மேனனையே ஒப்பந்தம் செய்துள்ள விஷால், அவரது சம்பளத்தையும் சில லகரங்கள் உயர்த்தியுள்ளார்.

## ஹீ...

### கதையை...

தலைவ...
பெரும் அதிர்ச்சிக்...
இனி, பெரிய ஹீ...
வைப்பதைவிட, ந...
முடிவுக்கு வந்திருக்...
இயக்குநர்களிடம், ...
'கதை பிடித்திருந்தா...
இரண்டாம் தட்டு ந...
வருகிறார்.

சிம்புவுடன்...
தோல்வியில் முடிய...
நயன்தாரா, அந்த கா...
சினிமாவையே காதல...
சினிமாவுக்கு டாட்டா...
காட்ட, தற்போது மீண்...
சமீபத்திய படங்கள் ...
இந்த வெற்றிய...
என்று புரிந்துகொண்ட...
உதயநிதியின் 'இது கதி...
காதல்' படத்தில் நடித்...
இந்த நிலையில், சிம்பு...
ஜோடியாக நடிக்க நயன்...
அழைப்பு வந்துள்ளதாம்...
இதற்கு சம்மதம் தெரிவி...
நயன்தாரா சம்பளமாக ரூ...
கேட்டிருக்கிறாராம். சிம்பு...
இணைந்தால் அது படத்தி...
விளம்பரமாக இருக்கும் எ...
படப்பிடிப்புக் குழுவினர் ...
கேட்ட சம்பளத்தை
கொடுக்க சம்மதம்
தெரிவிப்பார்கள்
என்று கூறப்படுகிறது.



# ஹீரோயிச



## கதையை தவிர்க்கும் அமலாபால்!

தலைவா படத்தின் தோல்வி, அமலாபாலை பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கிவிட்டது. அதனால், இனி, பெரிய ஹீரோக்களின் படங்கள் மீது நம்பிக்கை வைப்பதைவிட, நல்ல கதைகளை மட்டுமே நம்புவோம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார். அதனால், புதிதாக கதை கூற வரும் இயக்குநர்களிடம், முன் போல், ஹீரோ யார் என்று கேட்காமல், 'கதை பிடித்திருந்தால், ஹீரோ ஒரு பிரச்சினையே இல்லை. இரண்டாம் தட்டு நடிகர் என்றாலும், ஜோடி சேர தயார்...' என்று கூறி வருகிறார்.



## மீண்டும் சிம்புவுடன் நயன்தாரா?

சிம்புவுடன் காதல் வயப்பட்டு, பிறகு அது தோல்வியில் முடிய மீண்டும் பிரபுதேவாவுடன் காதல் கொண்ட நயன்தாரா, அந்த காதலிலும் தோல்வியடைந்து தற்போது மீண்டும் சினிமாவையே காதலிக்கத் தொடங்கியுள்ளார். பிரபுதேவாவின் காதலால், சினிமாவுக்கு டாட்டா காட்ட நினைத்தார். ஆனால், பிரபுதேவா அவருக்கு டாட்டா காட்ட, தற்போது மீண்டும் நடிக்கத் தொடங்கியுள்ள நயன்தாரா நடிப்பில் வெளியான சமீபத்திய படங்கள் பெரும் வெற்றிபெற்றுள்ளன.

இந்த வெற்றியால், தன்னை ஹீரோக்கள் கைவிட்டாலும் ரசிகர்கள் கைவிடவில்லை என்று புரிந்துகொண்ட நயன்தாரா, பல படங்களில் நடிக்க சம்மதித்து வருகிறார். தற்போது ...யநிதியின் 'இது கதிர்வேலன் ...ல்' படத்தில் நடித்து வருகிறார். ... நிலையில், சிம்புவுக்கு ...டியாக நடிக்க நயன்தாராவுக்கு ...ழப்பு வந்துள்ளதாம். ...து சம்மதம் தெரிவித்துள்ள ...தாரா சம்பளமாக ரூ.2 கோடி ...ருக்கிறாராம். சிம்பு - நயன்தாரா ...ந்தால் அது படத்திற்கு பெரும் ...ரமாக இருக்கும் என்று கருதும் ...டிப்புக் குழுவினர் நயன், ...சம்பளத்தை ... சம்மதம் ...பார்கள் ...றப்படுகிறது.



## காஜலை சாடிய ஸ்ரேயா!

காஜல் அகர்வால் அளித்த பேட்டி ஒன்றில், 'ஸ்ரேயா போன்ற நடிகைகள் நடிப்பிலிருந்து ஓய்வு பெறலாம்...' என்று கருத்து கூறியிருந்தார். இதனால் ஆவேசமாகி விட்ட ஸ்ரேயா. 'காஜலை விட, நான் சீனியர்தான் என்றாலும், எனக்கொன்றும் அதிக வயதாகி விடவில்லை. அதுமட்டுமின்றி, 31 வயதாகியும் திருமணம் பற்றி யோசிக்காமல் பணம் சம்பாதிக்கும் நோக்கத்திலே இருக்கும் காஜல் என்னைப்பற்றி கருத்து கூறும் அளவுக்கு, பெரிய நடிகையும் இல்லை அனுபவசாலியும் இல்லை...' என்று கோபத்தில் வார்த்தைகளை கொட்டியுள்ளார்.



## தமன்னாவை பாராட்டிய சமந்தா!

தெலுங்கில் முன்னணி நடிகையாகத் திகழும் சமந்தாவுக்கு இன்னமும் தன் நடனத்தில் திருப்தியில்லை. 'வேகமாக என்னால் நடனம் ஆட முடியாது. மேலும் நடனத்தில் என்னைவிட சிறந்தவர் தமன்னா. அவரது நடனத்தை பல படங்களில் பார்த்து அசந்து போன நான் அவரது தீவிர ரசிகையாகிவிட்டேன் என்று வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

## பாடல்



படம் : பூவே உனக்காக
இசை : எஸ்.ஏ. ராஜ்குமார்
பாடியவர்கள் : சித்ரா
பாடலாசிரியர் : கவிஞர் பழனி பாரதி

ஆனந்தம் ஆனந்தம் பாடும்
மனம் ஆசையில் ஊஞ்சலில் ஆடும்
ஆனந்தம் ஆனந்தம் பாடும்
மனம் ஆசையில் ஊஞ்சலில் ஆடும்
ஆயிரம் ஆயிரம் காலம்
இந்த ஞாபகம் பூ மழை தூவும்
காற்றினில் சாரல் போல பாடுவேன்
பூக்களில் தென்றல் போல தேடுவேன்
நீ வரும் பாதையில் கண்களால்
தவம் இருப்பேன்

(ஆனந்தம் ஆனந்தம் பாடும்)

உன்னை பார்த்த நாளில் தான் கண்ணில்
பார்வை தோன்றியது
உந்தன் பேரை சொல்லித்தான் எந்தன்
பாஷை தோன்றியது
உன்னை மூடி வைக்கத்தான் கண்ணில்
இமைகள் தோன்றியது
உன்னை சூடி பார்க்கத்தான் பூக்கள்
மாலை ஆகியது
நீ என்னை சேர்ந்திடும் வரையில்
இதயத்தில் சுவாசங்கள் இல்லை
நீ வந்து தங்கிய நெஞ்சில்
யாருக்கும் இடமே இல்லை
பார்த்து பார்த்து ஏங்கிய சொந்தம்
வாசல் வந்து சேர்ந்ததே

(ஆனந்தம் ஆனந்தம் பாடும்)

உன்னை நீங்கி எந்நாளும்
எந்தன் ஜீவன் வாழாது
உந்தன் அன்பில் வாழ்வதற்கு
ஜென்மம் ஒன்று போதாது
உன்னை எண்ணும் உள்ளத்தில்
வேறு எண்ணம் தோன்றாது
காற்று நின்று போனாலும்
காதல் நின்று போகாது
எங்கெங்கோ தேடிய வாழ்வை உன்
சொந்தம் தந்தது இங்கே
சந்தங்கள் தேடிய வார்த்தை
சங்கீதம் ஆனது இங்கே
ஆசை காதல் கைகளில் சேர்ந்தால்
வாழ்வே சொர்க்கம் ஆகுமே

ஆனந்தம் ஆனந்தம் பாடும்
மனம் ஆசையில் ஊஞ்சலில் ஆடும்
ஆனந்தம் ஆனந்தம் பாடும்
மனம் ஆசையில் ஊஞ்சலில் ஆடும்
ஆயிரம் ஆயிரம் காலம்
இந்த ஞாபகம் பூ மழை தூவும்
காற்றினில் சாரல் போல பாடுவேன்
பூக்களில் தென்றல் போல தேடுவேன்
நீ வரும் பாதையில்
கண்களால் தவம் இருப்பேன்

(ஆனந்தம் ஆனந்தம் பாடும்)

## சிறுவர் பகுதி

# நீ பாதி நான் பாதி



சந்தையில் முல்லா தென்னங்கன்று ஒன்றைப் பார்த்தார். வீட்டில் ஒரு மரம் வளர்த்தால் நன்றாயிருக்குமே என்றெண்ணி அதன் விலையைக்கேட்டார்.

விற்பவன் ஒரு விலையைச் சொன்னான். முல்லாவிடம் அவ்வளவு பணம் இல்லை. அப்போது அங்கேயிருந்த நண்பர் ஒருவனைப் பார்த்தார்.

அவனிடம் ''நண்பனே! இந்தத் தென்னங்கன்றை வாங்க என்னிடம் பணம் கொஞ்சம் குறைகிறது. குறைகின்ற பணத்தை நீ இப்போது எனக்குக் கடனாய்க் கொடு. வீட்டுக்குப் போனதும் திருப்பித்தருகிறேன்'' என்றார்.

அந்த நண்பன் ஒரு பேராசைக்காரன். ''முல்லா! கடன் எல்லாம் வேண்டாம். பாதிப் பணத்தை நீ போடு. மேல் பணத்தை நான் போடுகிறேன். விளைச்சலில் ஆளுக்குப் பாதி எடுத்துக் கொள்ளலாம்'' என்றான்.

''அதனாலென்ன? தாராளமாக அப்படியே செய்யலாம்'' என்றார் முல்லா. அவ்வளவு காய்களையும் வைத்துக் கொண்டு நாம் என்ன செய்யப் போகிறோம்? இவன்தான் பாதி எடுத்துக் கொள்ளட்டுமே என்ற எண்ணம் அவருக்கு.

தென்னங்கன்று முல்லாவின் வீட்டில் நடப்பட்டது. தினந்தோறும் அதற்குத் தண்ணீர் ஊற்றி கவனித்து வந்தார் முல்லா. மரம் கிடுகிடுவென வளரத் தொடங்கியது. மரத்தில் காய்கள் ஏராளமாகக் காய்த்துத் தொங்கின.

முல்லா நண்பனை அழைத்து, ''பேசியபடி பாதிக் காய்களை நீ எடுத்துக்கொள். மீதியை எனக்கு விட்டுவிடு'' என்றார் பெருந்தன்மையோடு.

''அது எப்படி நியாயமாகும்?'' என்றான் நண்பன் கோபத்துடன்.

''ஆளுக்குப் பாதி. அதுதானே நியாயம்?'' ஆச்சரியத்துடன் கேட்டார் முல்லா.

ஆத்திரத்துடன் ''இது நியாயம் இல்லை'' என்று கத்தினான் அந்த நண்பன்.

முல்லா குழப்பத்துடன் அவனைப் பார்த்தார்.

''நீ பாதிப்பணம் போட்டாய். நான் மேல் பணம் போட்டேன். ஆகவே மேலே உள்ள காய்கள் எனக்குத்தான் சொந்தம். அந்த நியாயப்படி வேரிலிருந்து பாதிமரம் வரைதான் உன்னுடையது. அதனால் காய்களைத் தொட உனக்கு உரிமை இல்லை'' என்றான் கறாராக.

முல்லா ஒன்றும் பேசவில்லை. நேராக வீட்டினுள் சென்றார்.

கோடரி ஒன்றை எடுத்து வந்தார். அடி மரத்தை ஓங்கி வெட்ட ஆரம்பித்தார்.

பதறிப்போய் கத்தினான் நண்பன்.

''முல்லா! என்ன செய்கிறாய்? நிறுத்து நிறுத்து! மரத்தை ஏன் வெட்டுகிறாய்?'' என்று கூச்சலிட்டான்.

''பேசாதே'' என்று அவனை அதட்டிய முல்லா ''நீயே ஒப்புக் கொண்டபடி வேரில் இருந்து பாதி மரம் எனக்குத்தானே சொந்தம்.

எனக்கு உரிமையுள்ள அதை நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன். நீ யார் அதைக் கேட்பதற்கு? அதற்கு மேல் உள்ள பாதி மரம்தானே உன்னுடையது. அதை நீ என்ன செய்தாலும் நான் கேட்க மாட்டேன். தெரிகிறதா?'' என்றார் உறுதியான குரலில்.

தன் பிடிவாதத்திலிருந்து இறங்கி வந்தான் நண்பன்.

''வேண்டாம் முல்லா, மரத்தை வெட்டாதே. நீ சொன்னபடியே காய்களை ஆளுக்குப் பாதி எடுத்துக் கொள்வோம்'' என்றான் சமாதானமானக் குரலில்.

''அப்படி வா வழிக்கு'' என்றார் முல்லா.



## கோபம்

* கோபம் கொப்பளிக்கும் அந்த ஒரு கணத்தில், நீ பொறுமை காத்தால் நூறு நாள் துன்பத்திலிருந்து தப்பித்து விடுவாய்.
* கோபத்தை வெளிக்காட்டுவது, குளவிக் கூட்டின் மீது கல்லெறிவதற்கு ஒப்பானது.
* கோபத்தை வெற்றி கொள்வதற்கு ஒரே வழி, அதைத் தாமதப்படுத்துவது.
* ஒரு கண நேரத்தின் கோபத்தை அடக்கி வைப்பவன், ஒரு நாளையத் துயரத்தை அடக்கியவனாவான்.
* கோபம் தலைதூக்கும்போது, அதன் பின்விளைவுகளைச் சிந்தித்துப் பாருங்கள்.
* கோபப்படும் மனிதனால் அதிக அளவு சிறப்பாக வேலைகள் செய்ய முடியாது. அமைதியான, மன்னிக்கக்கூடிய, சம நோக்குடைய, நிலைகுலையாத மனமுடையவனே அதிக அளவு செயல்பட முடியும்.

## மான்களின் எல்லை

ஆப்பிரிக்காவில் காணப்படும் சித்திரக்குள்ள மான்கள் 30 பவுன்ஸ் எடையும் 2 அடி உயரமும் உள்ளவை.

இந்த மான்கள் தாங்கள் வாழும் நிலத்தின் எல்லையை வினோதமான முறையில் குறியிட்டு வைத்திருக்கும்.



மரங்களின் சிறு கிளைகளை தங்கள் கண்களில் அழுத்தி, கண்ணிலிருந்து வரும் ஒரு வகை திரவத்தை அந்த மரக்கிளைகளில் பூசி விடுமாம். இந்த வாசனை மூலம் தாங்கள் வாழும் பகுதியின் எல்லை எது? என்பதைக் கண்டுபிடித்து வசிக்கின்றனவாம்!

## புகழ் பெற்ற குதிரை



1952 ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் போட்டியில் இங்கிலாந்தைச் சேர்ந்த ஹாரி லைவெலின் குதிரையேற்றத்தில் தங்கம் வென்றார். ஆனால் இவருக்கு கிடைத்த மரியாதையை விட இவரது குதிரைக்கே அதிக புகழ் கிடைத்தது. இந்த குதிரையின் ஆட்டோகிராப் (அதாங்க கால் தடம் பதிக்க) கேட்டு பலர் ஹாரியை தொந்தரவு செய்தார்களாம்.

இறக்கும்வரை புகழுடன் வாழ்ந்த அந்தக் குதிரைக்கு இறந்த பின்னும் நல்ல மரியாதை கிடைத்தது. இலண்டன் கால்நடைப் பல்கலைக்கழகத்தில் பல ஆண்டுகள் இந்த குதிரையின் எலும்புக் கூடு பராமரிக்கப்பட்டது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!





(4 ம் பக்கத் தொடர்ச்சி ................. )

## இரசாயனவியல்

07) ஆவர்த்தன அட்டவணையில் உள்ள மூலகங்கள் தரப்பட்டுள்ளன. இவை நியம குறியீடு அல்ல மூலகம் E ஓர் கார உலோகம் ஆகும்.

| மூலகம் | A | B | C | D | E | F | G |
|---|---|---|---|---|---|---|---|
| அணு எண் | x-5 | x-4 | x-2 | x | x+1 | x+3 | x+5 |

i. மூலகம் G இன் இலத்திரன் நிலையமைப்பு.

ii. நீரில் பாதுகாக்கப்படும் மூலகம் எது?

iii. வாயுக்கள் எவை?

iv. மின் எதிர் மூலகங்கள் எவை?

v. மூலகம் B யும், C யும் சேர்ந்து உருவாக்கும் பிணைப்பை வரைக.

vi. மூலகம் E பாதுகாக்கப்படும் முறையையும் அதற்கான காரணத்தையும் தருக.

vii. மூலகம் F இனூடாக கொதி நீராவியை செலுத்தும் போது நிகழும் தாக்கத்தைத் தருக.

viii. மூலகங்களை அட்டவணைப்படுத்துவதால் ஏற்படும் அனுகூலங்கள் 2 தருக.

08) A. போயிலின் விதியைக் கொண்டு mmHg இலான வளி மண்டல அமுக்கத்தைக் கணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செயன்முறையின் இரு நிலைகள் உருவில் காட்டப்பட்டுள்ளன.




1) போயிலின் விதியைக்கூறுக?

2) நிலை I இல் சிறை பிடிக்கப்பட்ட வளியின்

i. கனவளவு

ii. அமுக்கம் என்பவற்றைக் காண்க?
(படத்தில் தரப்பட்ட அளவீடுகள் யாவும் mmஇல் தரப்பட்டுள்ளன. குழாயின் குறுக்குவெட்டுப் பரப்பு Amm² எனவும் வளிமண்டல அமுக்கம் PmmHg எனவும் கொள்க)

3) நிலை II இல் சிறைப்பிடிக்கப்பட்ட வளியின்

i. கனவளவு

ii. அமுக்கம் என்பவற்றைக் காண்க.

B) i. வளிமண்டல அமுக்கம் 75cmHg எனக் கொண்டு அமைப்பு A அமைப்பு B யில் உள்ளவாறு திருப்பப்படின் இரசத்தால் சிறைப் பிடிக்கப்பட்ட வளியின் கனவளவு ($V_2$) யாது?




ii. போயிலின் விதிப்படி அமுக்கத்திற்கும், கனவளவிற்கும் இடையிலான வரையை வரைக.

C) கதோட்டுக் கதி பரிசோதனை அமைப்பு காட்டப் பட்டுள்ளது.



1) இப்பரிசோதனையை மேற்கொண்டவர் யார்?

2) இக்குழாய் இறக்கக் குழாய் என அழைக்கப்பட்டதன் காரணம் யாது?

3) கதோட்டுக் கதிரின் இயல்புகள் 2 தருக.

## பௌதிகவியல்

09) A. கார் ஒன்றின் தடுப் புத் தொகுதியின் முதன்மைச் சிலிண்டர், துணைச்சிலிண்டர் என்பவற்றின் ஒழுங்கமைப்பு உருவில் காட்டப்பட்டுள்ளது.




முதன்மை உருவத்தின் குறுக்குவெட்டுப் பரப்பு $8cm^2$ ஆகவும் அது தடுப்பு பாயி மீது பிரயோகிக்கும் விசை 28N ஆகவும் உள்ளது.

1. முதன்மை முசலத்தால் தடுப்பாயி மீது ஊற்றப்படும் அமுக்கத்தைக் காண்க?

2. அமுக்கமானது தடுப்புப் பாயினூடு துணை சிலிண்டருக்கு ஊடுகடத்தப்படுகின்றது எனின் துணைச் சிலிண்டரின் முசலத்தால் தடுப்புப்பாயி மீது பிரயோகிக்கப்படும் விசையைக் காண்க?

3. வளியமுக்கம் பயன்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக.

B) 1) ஆக்கிமிடிசின் விதியைக் குறிப்பிடுக.

2) 200 Kg திணிவுடைய பொருள் ஒன்றை நீரினுள் அமிழ்த்தும் போது அமிழ்ந்த கனவளவிற்கும் தோற்ற நிறைக்குமான வரைபு அருகில் தரப்பட்டுள்ளது.




i. பொருளின் உண்மை நிறை யாது?

ii. முற்றாக அமிழ்த்தப்பட்ட நிலையில் இடப்பெயர்க்கப்பட்ட திரவத்தின் கனவளவு (V) யாது?
(நீரின் அடர்த்தி $1000kgm^{-3}$), புவி யீர்ப்பு $10ms^{-2}$)

iii. பொருளின் அடர்த்தி யாது?

10) A. ரவி என்பவர் கிழக்குநோக்கி 6 km தூரத்தை 20 நிமிடத்தில் சென்று குமாரின் வீட்டை அடைந்தார். அங்கு 10 நிமிடம் தங்கி மீண்டும் கிழக்குநோக்கி 3 km தூரத்தை 5 நிமிடத்தில் சென்று ராஜாவின் வீட்டை அடைந்து உடனடியாக தனது ஆரம்ப இடத்தை 40 நிமிடத்தில் வந்தடை ந்தார்.

i. ரவியின் இயக்கத்திற்கான இடப்பெயர்ச்சி - நேரவரைபை வரைக.

ii. ரவியின் இடப்பெயர்ச்சி யாது?

iii. ரவி, குமாரின் வீட்டை எக்கதியில் சென்றார்.

iv. நீர் வரைந்த இடப்பெயர்ச்சி நேரவரைபிற்கு ஒத்த வேக நேர வரைபை வரைக?

B. கப்பித் தொகுதியின் அமைப்பு தரப்பட்டுள்ளது.




i. கப்பிஉராய்வுஅற்றது எனக் கொண்டு இப்பொருளை உயர்த்த தேவையான இழிவு எத்தனத்தைக் காண்க?

ii. உராய்வு உண்டாகி இப்பொருளை உயர்த்த800N விசை தேவைப்படின் கம்பியின் திறன் யாது?

iii. உராய்வு உள்ளபோது கம்பியின் திறன் 2/3 ஆகக் காணப்படின் பொருளை உயர்த்த தேவையான இழிவு எத்தனம் யாது?

# என்னாச்சி...!

## கண்ணால் காண்பதும் பொய் காதால் கேட்பதும் பொய்

கடந்த தீபாவளிக்கு முதல் நாள் நான் சில பொருட்கள் வாங்க கடைக்கு சென்றிருந்தேன். கடையில் கூட்டம் அதிகமிருந்தது. அப்போது வந்த ஒரு மனிதர் கடைக்காரரிடம் ஒரு பையைக்கொடுத்து இதை பத்திரமாக வைத்திருங்கள் ஒரு ஐந்து நிமிடத்தில் வருகிறேன் என்று சொல்லி பையை கொடுத்துவிட்டு சென்றுவிட்டார்.

அந்த பையில் மது போல்தல்கள் இரண்டும் 1 போத்தல் பியரும் இருந்தது. அந்த மனிதரை எனக்கு நன்றாகத் தெரியும். அவரின் மனைவி என்னுடைய வீட்டில் தான் வீட்டு வேலை செய்கிறாள். அவர்களுக்கு இரண்டு பிள்ளைகளும் உள்ளனர்.

சிறிது நேரத்தின் பின் அந்த மனிதர் வந்து தான் கொடுத்து வைத்திருந்த பையை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு தீபாவளிக்காக சில பொருட்களை வாங்கினார். எல்லாப் பொருட்களும் 200 கிராம் 500 கிராம் என்று மிகவும் குறைவாகவே வாங்கிக்கொண்டு சென்றார்.

அவர் சென்ற பின் கடைக்காரர் ''பாருங்களேன் தீபாவளிக்கு அவருக்கு தேவையாக மதுமட்டும் மூன்றுபோத்தல் வாங்கிக்கொண்டு செல்கிறார். ஆனால் வீட்டுக்கு சாமான் மிகவும் குறைவாக வாங்குகிறார். இவருக்கெல்லாம் எதற்கு குடும்பம்''என்று கதைத்துக் கொண்டார்கள்.

இந்த விடயம் என்னை மிகவும் வேதனையில் ஆழ்த்தியது. தீபாவளி முடிந்த பின் அம் மனிதரின் மனைவியை அழைத்து விடயத்தை சொல்லிவிட்டேன்.

அவள் அவசரமாக மறுத்தாள், ''அம்மா அவர் குடிக்கமாட்டார். அவர் வேலை செய்யும் வீட்டுக்காரர்களுக்குத் தான் அந்த மதுப்போத்தல்களை வாங்கிச் சென்றார்'' மேலும் என்னுடைய வருமானத்தில் எங்கள் இரண்டு பிள்ளைகளையும் படிக்க வைக்கிறேன். அவருடைய பணத்தில்தான் வீட்டு செலவுகளை பார்க்கிறார். கிடைக்கும் வருமானத்திற்கேற்ப எங்கள் குடும்பத்தை நடத்துகிறோம்'' என்றாள்.

ஒரு விடயத்தை மேலோட்டமாக கண்டுவிட்டு முடிவுக்கு வருவது எவ்வளவு பெரிய தப்பு என்று புரிந்துகொண்டேன்.

மேலும் ஒரு நல்ல குடும்பஸ்தரை தப்பாக எடைபோட்டதற்காக என்னை நானே நொந்து கொண்டேன்.



## குழந்தைகளை அன்பால் கட்டுப்படுத்துங்கள்



சமீபத்தில் நண்பர் வீட்டுக்குச் சென்றிருந்தேன். பாடசாலைக்கு செல்லும் நேரம். நண்பரின் மகன் படியில் அமர்ந்து செருப்பு போட்டுக் கொண்டிருந்தான். அதைப் பார்த்த நண்பரின் மனைவி, ''கீழே உட்காராதே... நாற்காலி கொண்டு வர்றேன் எந்திரி'' என்றாள். அவன் கேட்கவில்லை. நண்பரின் மனைவிக்கு ஆத்திரம். அவனை உள்ளே அழைத்துப் போய் அடித்தார். நண்பர் எதுவும் பேசாமல் அமர்ந்திருந்தார். ''ஏங்க தேவையில்லாம பையனை அடிக்கிறாங்க?'' என்றேன். ''பின்ன என்ன! கீழே உட்கார்ந்து செருப்புப்போடுவது தப்பு. தப்பு செஞ்சா கண்டிக்கணும்ல?'' என்று மனைவிக்கு ஆதரவாகப் பேசினார் நண்பர். எனக்கு வருத்தமாக இருந்தது. சுத்தமாக இருக்கும் மார்பிள் தரையில் அப்படி என்ன அழுக்கு இருக்கப்போகிறது? குழந்தைகளுக்கு அன்பாகச் சொல்லிப் புரியவைக்கலாமே.... தங்கள் கோப தாபங்களை வைத்து குழந்தைகளை மாட்டை அடிப்பது போல் அடிப்பது எந்த விதத்தில் நியாயம்? பெற்றோர்களே தயவு செய்து குழந்தைகளுக்கு அன்பால் சொல்லுங்கள்.

## சாரதிகளே உங்கள் மனிதாபிமானம் எங்கே?

அன்று பஸ்ஸில் ஓரளவு கூட்டம் இருந்தது. அப்போது ஒரு இளவயதுத் தாய் இடுப்பில் கைக் குழந்தையுடனும் மற்றைய கையில் 4 வயதுக் குழந்தையை பிடித்தபடியும் பஸ்ஸிலிருந்து இறங்கினாள்.

ட்ரைவரோ அவசரப்பட்டார். தாய் கீழே இறங்கி கையில் பிடித்திருந்த குழந்தை இறக்குவதற்குள் ஓட்டுநர் பஸ்ஸை எடுத்துவிட்டார். குழந்தை தடுமாறி கீழே விழச்சென்றது, தாயும் ''ஐயோ என்னுடைய பிள்ளை.....! நிறுத்துங்க நிறுத்துங்க'' என்று கத்தினாள்.

அந்தத்தாய் விரைந்து தன்குழந்தையைத் தூக்கி காப்பாற்றிவிட்டாள்.

''பார்த்து நிதானமாக ஓட்டுங்கள் உங்கள் அவசரத்திற்காக ஓட்டாதீர்கள்'' என்று பலரும் ஓட்டுநரை ஏசினார்கள்.

அதற்கு ஓட்டுநர் ''இப்ப என்ன நடந்துவிட்டது என்று கத்துகிறீர்கள். யாரும் சாகலதான'' என்றார் அலட்சியமாக.

அவரின் இந்த பதில் அத்தனை பேரையும் திகைக்க செய்தது.

மேலும், அந்த ஓட்டுநர் அதன்பின் பயணிகளை ஏசிக் கொண்டே வந்தார். மேலும் கோபத்தில் அவர் தாறுமாறாகவே பஸ்ஸை செலுத்தியதை அவதானிக்க முடிந்தது.

பாருங்களேன் பஸ் சாரதி என்பவர் அவர் ஒருவர் மட்டுமல்ல அவரை நம்பி பயணிகள் இருக்கிறார்கள் என்பதை அவர் மறந்துவிட்டார். ஏதும் அசம்பாவிதம் இல்லையே என்ற அந்த பதில் எத்தனை தூரம் பொருத்தமானது? குறித்த அந்தத்தாய் எப்படியெல்லாம் பதறிப் போனாள்? அந்த நிலை குறித்த ஓட்டுநரின் மனைவிக்கோ அல்லது அவரது உறவுகளுக்கோ ஏற்பட்டிருந்தால் சும்மா இருப்பாரா?

தன் வீட்டு உயிர்போலதானே மற்றவர்களும் என்பதை சில சாரதிகள் மறந்துவிட்டு செயற்படுவது வேதனைக்குரியவிடயம்.



தகவல் தொகுப்பு ஆர்.அபி



# வறுமையில் வாடி புகழின் சிகரத்துக்கு சென்ற மர்லின் மன்றோ!

அந்தப் பெண்ணுக்கு எங்குமே நிம்மதி இருக்கவில்லை. பிறக்கும் முன்னரே தந்தையை இழந்து, குழந்தைப் பருவத்திலேயே தாயையும் இழந்து அநாதை விடுதிக்குள் அடைக்கலம் புகுந்தவள். குழந்தைப் பருவத்து பாசம் மட்டுமல்ல பட்டினிக்கு உணவு கூட அங்கே சரிவரக் கிடைக்கவில்லை. ஓரளவு பருவம் வந்ததும் விடுதியை விட்டு வெளியேறினாள். வேலைக்காரியாக விடுகளில் வேலைசெய்தாள். ஆனால், அங்கேயும் பட்டினியும் அடியும் உதையும்தான் கிடைத்தது. ஒவ்வொரு வீட்டிலும் இருந்து பந்துபோல் அங்கும் இங்கும் அடித்து விரட்டப்பட்டாள்.

இப்படிப்பட்ட பெண்தான் நாளை உலகின் ராணியாக கொண்டாடப்படப் போகிறாள் என்று யாரேனும் சத்தியம் செய்திருந்தால் கூட யாரும் நம்பியிருக்க மாட்டார்கள்!

ஆம்! ஹொலிவுட் சினிமா உலகின் ராணியாக விளங்கிய நடிகை மர்லின் மன்றோதான் அந்த துரதிர்ஷ்டவசமான பெண்!

மர்லின் மன்றோவுக்கு இணையாக அகில உலகப் புகழ் பெற்ற நடிகை என்ற பெருமை இன்று வரை வேறு எவருக்கும் வாய்க்கவில்லை. அவருடைய கடைக்கண் பார்வைக்காக எத்தனையோ கோடீஸ்வரர்கள் தவம் கிடந்திருக்கிறார்கள். மர்லின் மன்றோ 1926 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதலாம் திகதி அமெரிக்காவில் உள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் நகர ஆஸ்பத்திரியில் பிறந்தார். மர்லின் மன்றோ தந்தை அவள் பிறக்கும் முன்பே ஒரு கார் விபத்தில் இறந்துவிட்டார். அவர் பிறந்தபோது அம்மாவுக்கும் உடல் நிலை சரியில்லை. எனவே அனாதை விடுதியில் சேர்க்கப்பட்டார்.

வீட்டு வேலைகள் செய்யும் பருவம் வந்ததும் அனாதை விடுதியை விட்டு வெளியேறினார். பல வீடுகளில் பாத்திரம் துலக்குவது போன்ற சிறிய வேலைகளை பார்த்து வந்தார். ஆனால் அங்கும் துன்பம் தான் தொடர்ந்தது.

கல்யாணம் ஆன பிறகாவது வாழ்க்கையில் நிம்மதி ஏற்படுமா என்ற ஆசையில் 16 ஆவது வயதில் ஜேம்ஸ் என்ற வாலிபரை மணந்தார்.

ஆனால், அவரும் ஒழுங்கானபடி வேலை செய்து பிழைக்காததால் தகராறு ஏற்பட்டது. ஒரு வருடத்தில் விவாகரத்து செய்தார். அதன்பின்பு விமான கம்பனியில் பரசூட் திருத்தும் வேலை செய்தார். அதன்பின் படம் வரைவதற்கு மொடல் பெண்ணாக நிற்க முயற்சித்தார். ஆனால் அதற்குக்கூட லாயக்கு இல்லை என்று அவரை எல்லோரும் விரட்டினார்கள்.

எனவே கையில் பணம் இல்லாமல் பல நாட்கள் பட்டினி கிடந்தார். விளம்பரங்களுக்கு நீச்சல் உடையில் தோன்றுவது மூலம் காலம் தள்ளினார். அதன் பிறகு நடிப்பு ஆசையால் ஹாலிவுட் நகரில் உள்ள சினிமா பள்ளிக் கூடத்தில் சேர்ந்தார்.

வாடகை பணம் கொடுக்காததால் தங்கி இருந்த வீட்டை விட்டு துரத்தினார்கள். இருக்க இடமின்றி நடு ரோட்டில் நிற்கவேண்டியது ஆயிற்று. எனவே ஒரு கலண்டருக்காக நிர்வாணமாக போஸ் கொடுத்தார். இதில் 250 ரூபாய் வருமானம் வந்தது. அதை வைத்துக் கொண்டு மீண்டும் சினிமா உலகில் புக முயற்சி செய்தார்.

பத்திரிகையில் வந்த மன்றோவின் படத்தைப் பார்த்துவிட்டு அவரை ஒப்பந்தம் செய்ய அழைத்தார்கள் படக் கம்பெனிக்காரர்கள். ஆனால் முதல் படத்தில் பேசக் கிடைத்த வசனம் ஒரே ஒரு வார்த்தை. அதுவும் படம் வெளிவரும்போது வெட்டப்பட்டுவிட்டது.

ஆனால், படங்களில் ஒரு நிமிடம் வந்தாலும் ரசிகர்கள் மனதில் இடம்பிடித்தார் மர்லின். படம் வரையக்கூட லாயக்கு இல்லை என்று வர்ணிக்கப்பட்ட மர்லின் மன்றோ ரசிகர்களால் சினிமா உலக தேவதையாக வர்ணிக்கப்பட்டார்.

மர்லின் மன்றோவின் கவர்ச்சியான உடல் அழகில், நடை அழகில் ரசிகர்கள் மயங்கினார்கள். பல படங்களில் கதாநாயகியாக நடித்தார். பெரிய படக்கம்பெனி வருடத்திற்கு 55 இலட்சம் ரூபா வீதம் 7 வருடத்திற்கு அவரை ஒப்பந்தம் செய்தது.

மர்லின் மன்றோவின் சொந்தப் பெயர் நார்மாஜின் டென்சன் என்பது. மர்லின் மூன்று முறை திருமணம் செய்தார். மூவரையும் விவாகரத்து செய்துவிட்டார், முதல் கணவர் ஜேம்ஸ், பொலிஸ்காரர். 2 ஆவது கணவர் கால்பந்து வீரர். பெயர் ஜேர்டிமாக்கியா. 3 ஆவது கணவர் சினிமா படத்தயாரிப்பாளர் ஆர்தர்மில்லர். 3 ஆவது கணவரான மில்லருடன் வாழ்க்கை நடத்தும் போது மர்லின் மன்றோவுக்கு 2 தடவை கருச்சிதைவு ஏற்பட்டது. தாயாக வேண்டும் என்று மர்லின் மிகவும் விரும்பினார். ஆனால் கடைசிவரை அவருக்கு குழந்தை இல்லை.

ஆங்கிலப்பட உலக புகழின் உச்சிக்கு சென்று கொண்டிருந்த மர்லின் மன்றோவுக்கு திடீரென்று மனநிலை பாதிக்கப்பட்டது. வைத்தியர்களின் சிகிச்சை அவரை பழைய நிலைமைக்கு கொண்டு வந்தது. அதன்பிறகு தொடர்ந்து சினிமாவில் நடித்தார்.

மர்லின் மன்றோ கடைசியாக நடித்துக் கொண்டு இருந்த படத்தின் பெயர் 'நான் கொடுப்பதற்கு இன்னும் சில உண்டு' அந்த படத்தில்தான் குளிக்கும் காட்சியில் அவர் நிர்வாணமாக நடித்தார்.

இந்த நிலையில் 5-8-1962 இல் மர்லின் மன்றோ தற்கொலை செய்துகொண்டார் என்ற செய்தி உலகம் முழுவதும் இருந்த சினிமா ரசிகர்களை அதிர்ச்சி அடையச் செய்தது. அமெரிக்காவில் சினிமா நகரமான ஹாலிவுட்டில் ஒரு மாளிகையில் மர்லின் மன்றோ வசித்து வந்தார். அதிகாலை 3 மணிக்கு மர்லின் மன்றோ கட்டிலில் மயங்கிக் கிடந்ததை வீட்டு வேலைக்காரர் பார்த்துவிட்டு வைத்தியர்களுக்கு தகவல் கொடுத்தார்.

மன்றோவின் படுக்கை அறைக் கதவு உள்பக்கம் தாளிடப்பட்டு இருந்தது. கதவை உடைத்து உள்ளே நுழைந்தார்கள். ஒரு கையில் டெலிபோனுடன் மன்றோ படுக்கையில் கிடந்தார். சோதித்துப் பார்த்ததில் அவர் இறந்து வெகுநேரம் ஆகி இருப்பது தெரிந்தது.

அளவுக்கு மீறி தூக்க மாத்திரை சாப்பிட்டதால் மரணம் அடைந்ததாக வைத்தியர்கள் கூறினார்கள். தற்கொலை செய்து கொண்ட மர்லின் மன்றோ கடிதம் எதுவும் எழுதி வைக்கவில்லை. அவர் ஏன் தற்கொலை செய்து கொண்டார் என்பது புரியாத புதிராக இருந்தது. தற்கொலை செய்து கொண்ட மர்லின் மன்றோவுக்கு வயது 36. சினிமா உலகத்திலேயே அதிக பணம் சம்பாதித்த நடிகையாகத் திகழ்ந்தார்.

அவரின் அந்தப் புகழை இதுவரை எந்த நடிகையும் எட்டவில்லை!

ரிஷி

# கோடிக்கணக்கில் செலவு செய்து அமைத்த வைத்தியசாலையால் என்ன பயன்?

வைத்திய சேவை மிக அத்தியாவசியமான தேவை! அதனால்தான் எமது நாட்டில் இலவசமாக மருத்துவ சேவைகள் வழங்கப்படுகின்றன. என்றாலும் பெருந்தோட்டத்துறை மக்களைப் பொறுத்தவரை இச்சேவையில் காணப்படும் பெரும் குறைபாடுகள் இம்மக்களுக்கு இலவச மருத்துவ சேவையை எட்டாக்கனியாக்கி வருகின்றன.

நுவரெலியா மாவட்டம் கொத்மலை பிரதேச சபைக்கு உட்பட்ட பெரட்டாசி கரகஸ்தலாவ, எல்பொட போன்ற கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த பெரட்டாசி, ரஸ்புருக், பூச்சிகொட, தொழிற்சாலைப் பிரிவு, மேரியல், அயரி, எல்பொட மேமலை, காச்சாமலை, கட்டகித்துல, வெதமுள்ள, கெமினிதன் ஆகிய பிரிவுகளில் சுமார் 8000 இற்கு மேற்பட்ட தோட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.












இத்தோட்டங்களில் வாழும் மக்களின் வைத்தியத் தேவைகளை பெரட்டாசி தோட்ட வைத்தியசாலையே நிறைவு செய்ய வேண்டியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க காலத்தில் தோட்ட வைத்தியசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் இறம்பொடை - பெரட்டாசி தோட்ட வைத்தியசாலை, ஹேவாஹெட்ட - மூல்லோயா தோட்ட வைத்தியசாலை, கந்தபொலை - ஐபொரஸ்ட் தோட்ட வைத்தியசாலை, கடுகன்சேனை பார்கேபல் தோட்ட வைத்தியசாலை, ஹட்டன் - டிக்கோயா வைத்தியசாலை போன்றவை தோட்ட அரசாங்க வைத்தியசேவைக்கு உள்வாங்கப்பட்டது.

இதன்படி இவைகளை திருத்தும் பணிகளும் இதற்கான வளங்களை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளும் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டன.

அதன் பயனாக பெரட்டாசி தோட்டத்தில் அமைக்கப்பட்ட வைத்தியசாலை நீண்டகாலமாக திறக்கப்படாதிருந்து கடந்த 2 வருடங்களுக்கு முன் திறக்கப்பட்ட போதும் அதன் முழுமையான பலனை தோட்ட மக்கள் பெறமுடியாதுள்ளது. நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெறும்நோக்கில் அமைக்கப்பட்ட இந்த வைத்தியசாலையில் ஒரு வைத்தியரும் 02 ஊழியர்களும் 01 காவலாளியுமே காணப்படுகின்றனர். வைத்தியர் காலையில் வந்து மாலையில் போய்விடுவார். தொழிலாளர்களோ மாலையில் வேலை முடிந்தே மருந்தெடுக்க வருவார்கள். மேலும் இந்த ஒரு வைத்தியரும் வேறு வேலைகளுக்கும் கூட்டங்களுக்கும் சென்றால் அன்று வைத்தியசாலை மூடப்பட்டிருக்கும்.

இங்குள்ள ஊழியர்கள் வைத்தியசாலைக்குள்ளேயே தங்கியும் உள்ளனர். ஆனால் இங்கு நோயாளிகள் தங்கியிருந்து சிகிச்சை பெற முடியாது. கட்டில் போன்றவையும் இல்லை. பல லட்சம் செலவு செய்து திறக்கப்பட்ட இந்த வைத்தியசாலை தற்போது மக்களுக்கு எவ்வித பயனும் இன்றி காணப்படுகின்றது.

ஊழியர்கள் தங்க விடுதி வசதிகள் இல்லை; இதனால்தான் புதிய வைத்தியர்கள் உட்பட ஊழியர் களை நியமிக்க முடியாத நிலை காணப்படுவதாக தெரியவருகின்றது. மக்கள் அவசர மருத்துவ சிகிச் சைகளுக்காக புஸ்ஸல்லாவ வைத்தியசா லையையே நாட வேண்டி யுள்ளது. அதுவும் சிக்கலான காரியம். காரணம் 25 கி.மீ பாதை முற்றாக சேதமடைந்துள்ளது. இப்பாதையில் இதுவரை 5 இற்கும் மேற்பட்ட பஸ் விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. பலர் இறந்தும் பலர் பாதிக்கப்பட்டும் உள்ளனர்.

நோயாளர்களையும், கர்ப்பிணித் தாய்மாரையும் பல மைல் தூரம் மோசமான பாதையில் லொறியிலும் ஆட்டோக்களிலும் கொண்டு செல்வதால் பெரும் அசௌகரியம் ஏற்படுகின்றது. இடைவழியிலேயே குழந் தைகள் பிறந்து இறந்த சம்பவங் களும் இங்கு பதிவாகி யுள்ளன.

9 பிரிவு களைக் கொண்ட தோட்டத்தில் அம்புலன்ஸ் வண்டி இல்லை. இது தொடர்பாக மக்கள் பல தடவைகள் கோரிக்கைவிடுத்தும் பாதைதிருத்தம் வைத்தியசாலை போன்றவற்றுக்காக போராட்டங்கள் நடத்தியும் பலனில்லை. எனவே விடுதிகள் கட்டி புதியவர்கள் நியமித்து வைத்தியசாலை எப்போது முறையாக இயங்குவது அதுவரை எங்கள் நிலைமை என்ன என இப்பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

ஞானி



# உங்கள் பிள்ளைகளை பாதுகாக்கும் பொறுப்பு மூன்றாம் மனிதருக்கு எப்படி இருக்க முடியும்?

கடந்த 2012 ஆம் ஆண்டு மாத்திரம் அட்டன் பொலிஸ் நிலையத்தில் பெண்களுக்கெதிரான 465 வன்முறைகள் பதிவாகியுள்ளன. இவ்வருடம் அதாவது 2013 ஆண்டில் இதுவரை சுமார் 260 முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளன.

சிறுவர் துஷ்பிரயோகங்கள், பாலியல் வன்கொடுமைகள் தீவிரமாக அதிகரித்து வருவதன் பின்னணியில் மது பாவனையும், தாய்மாரின் வெளிநாட்டு பயணமும் இருப்பதை மறுப்பதற்கில்லை.

மிக வேகமாக அதிகரித்து வரும் இவ்வாறான நிலைமைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அட்டன் சிவில் பாதுகாப்பு குழுவின் தலைவர் பண்டாரவின் ஏற்பாட்டில் விழிப்புணர்வுக் கூட்டம் எபோஸ்லி மால்பிரோ தோட்டத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

தொழிலுக்குச் சென்ற பெண்கள் குழுமியிருந்து இந்தக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இங்கு அட்டன் பொலிஸ் பரிசோதகரும் அட்டன் தலைமை பொலிஸ் நிலைய நிர்வாகப் பொறுப்பதிகாரியுமான எஸ்.தவக்குமார் உரையாற்றுகையில்:-

வெளிநாடு செல்லும் தாய்மார் மட்டுமல்ல, இங்கிருக்கும் தாய்மாரும் தமது பிள்ளைகளை தமது உறவினர்களின் வீடுகளில் விடுகிறார்கள். அவர்கள் இப்பிள்ளைகள் மீது அதிக அக்கறை செலுத்துவதில்லை. இதனால் பிள்ளைகள் தவறான வழிக்கு செல்கின்றனர்.

அத்தோடு எங்களுக்கு கிடைத்த அதிகமான சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகளில் குறித்த உறவினர்களே சிறுவர் மீது துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டுள்ளனர். மாமாவால் அல்லது தாத்தாவால், சித்தப்பாவால், அப்பாவால் என சொல்லவே வெட்கமாக இருக்கிறது. நாம் பிள்ளைகளைப் பெற்றுவிட்டு அதனை வளர்க்கும் பொறுப்பையும், பாதுகாக்கும் பொறுப்பையும் மற்றவரிடம் கொடுக்கின்றோம். இது எந்த வகையில் நியாயம்? உங்களுக்கு உள்ள பாசம், பொறுப்பு உங்கள் பிள்ளைகளை பாது காக்கும் மூன்றாம் மனிதருக்கு எப்படி இருக்க முடியும்?

பிள்ளைகள் பெற்றோரிடம் வளர்ந்தால்தான் சமுதாயத்தில் ஒரு நல்ல பிரஜையாக இருக்க முடியும். தாய்மார்கள் வெளிநாடு செல்வதன் காரணமாக அதிகமான பிள்ளைகள் மது பழக்கத்திற்கும் தவறான நெறிபிறழ்வுகளுக்கும் ஆளாகி உள்ளனர்.





அண்மையில் அட்டன் பொலிஸ் நிலையத்தில் நாங்கள் ஒரு சாரதியைக் கைது செய்தோம். அவர் 16 வயது மாணவி ஒருவரை பல நாட்களாக துஷ்பிரயோகத் திற்குட்படுத்தியுள்ளார்.

நாங்கள் அவரிடம் மேற்கொண்ட விசாரணையின்போது பல பாடசாலை மாணவர்களை இந்த நபர் துஷ்பிரயோகத் திற்குட்படுத்திய விடயம் வெளிச்சத்திற்கு வந்தது. பெற்றோர்களும் தமது பிள்ளைகளை இவர்கள் போன்றவர்களை நம்பி அனுப்பி விடுகின்றனர்.

இவர்கள் யார்? எங்கிருந்து வந்தார்கள்? எப்படிப்பட்டவர்கள் என்று ஒரு போதும் தேடுவதில்லை.

இதனால் இன்று குற்றச்செயல்கள் அதிகரிக்க பெற்றோரே காரணமாகியுள்ளனர். எனவே உங்கள் பிள்ளைகள் தொடர்பாக நீங்கள் இதைவிட அக்கறை செலுத்த வேண்டும்.

அண்மையில் மலையகத்தில் வறுமை அதிகரித்துள்ளது என குறிப்பிடப்பட்டபோது இலங்கையில் அதிகமாக மலையகத்தில் தான் மதுபான வகைகள் விற்பனையாகின்றது என்று கூறப்பட்டது.

மலையகத்தில் காசு இல்லாவிட்டால் எவ்வாறு அதிகமான மதுபான வகைகள் விற்பனையாகின்றன என்ற கேள்வி எழுகின்றது.

அத்தோடு பொலிஸ் நிலையத்தில் பதியப்படுகின்ற முறைப்பாடுகளில் நூற்றுக்கு 90 வீதம் மதுபானத்தால் ஏற்பட்ட தகராறுகளே!

மதுபாவனையால் ஏற்பட்ட வறுமை நிலையினைப்போக்க பிள்ளைகளையும் மனைவியையும் கொழும்புக்கும் வெளிநாட்டுக்கும் வேலைக்கு அனுப்புகிறார்கள். அவ்வாறு அனுப்பிய எத்தனை உயிர்கள் பிணங்களாக வீடு திரும்பியுள்ளன. எத்தனை உயிர்கள் தெரியாமலே காணாமல் போய் உள்ளன. இத்தனையும் கண்டும் கேட்டுமா புத்தி வரவில்லை? இதை விட வீதியில் சென்று பிச்சை எடுத்து பிழைக்கலாம்.

சமூக குற்றச் செயல்களையும் சமூக அநீதிகளையும் வெறுமனே நாங்கள் மட்டும் தடுக்க முடியாது. அதற்கு உங்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. அவ்வாறு நீங்கள் ஒத்துழைத்தால் நாங்கள் அதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளலாம்.

நாம் எப்போதும் பேசுபவர்களாக மாத்திரம் இருக்கக்கூடாது. அதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அப்போது தான் நாம் ஏனைய சமூகங்களைப் போல் தலைநிமிர்ந்து வளமாக வாழ முடியும். அதற்கு தோட்டப்பகுதியில் பெண்கள் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு அதன் மூலம் ஒழுக்கமற்ற செயல்களுக்கும் குற்றச்செயல்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கமுன்வர வேண்டும் என்றார்.

சூழல் பிரிவு பொலிஸ் உத்தியோகஸ்தர் கே.மகேஸ்வரன் கருத்து தெரிவிக்கையில்:-

தோட்டப்புற சூழல் பெரும்பாலும் சுத்தமாக்கப்படுவதில்லை. இதனால் டெங்கு நுளம்பு பெருகி பலருக்கு நோய் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. அதனை பலருக்கு தெரியப்படுத்திய போதிலும் அவர்கள் அதனை கவனத்தில் கொள்வதில்லை. இன்னமும் சிலர் தனியான மலசலகூட வசதிகள் கூட இன்றி இருக்கின்றனர். எனவே இவ்வாறான விடயங்களை தவிர்த்து ஆரோக்கியமாக வாழ சூழலைப் பேணி வா வேண்டும் என வலியுறுத்தினார்.

நமசிவாய

# கவிதைத் துளிகள்



## புரிந்திடாதோ பொது தருமம்

தைரியங்களின்
தரம் கெட்ட
வழி நடத்தலால்
தருமம் தலை
குனிந்திட
தார்மீகம்
வெட்கப்பட,
மீண்டும் ஒரு
மிலேச்சத்தனம்
புண்ணிய பூமியில்
புதிதாக
அரங்கேறியிருக்கிறது!

ஒடுக்கப்பட்ட
ஒரு சமூகத்தின்
ஓரங்கட்டப்பட்ட
சுதந்திரத்தில்
ஒரு சிறிதும் அக்கறையின்றி
கயமைத்தனம்
புரிந்து
காளி கோயிலையே
கபளீகரம்
செய்துவிட்டார்கள்
கயவர்கள்!

அங்கு சுற்றி
இங்கு சுற்றி
அடாவடியாக
ஆதி சக்தியின்
தலை மீதே
கை வைத்து விட்டார்கள்,
கசடர்கள்!

காதறுந்த
ஊசிக்கும்
கவலைப்படாத
கௌதம தருமம்
சூதுக்குள் சிக்கி
சூழ்ச்சிக்கு
மண்டியிட்டது எப்படி?

சுட்டெரிக்கும்
சூரியனாய்
வெட்டி அழிக்கும்
வீரவாளாய்
அட்டதிக்குகளையும்
ஆட்டிப் படைத்த
அன்னை சக்தியின்
அகோரம்
வெளிப்பட்டால்
அதிகாரமும் அக்கிரமமும்
அடியோடு
அழிந்திடாதா?

நா.ஜெயபாலன், பிபிலை.



## தாயே

உச்சி வெயிலினிலே உன் நெற்றி
வியர்க்குதடி - தாயே
உன்னை நினைக்கையில் நெஞ்சு
வெடிக்குதடி - தாயே
நீ கல்லில் நடக்கையில் எனது கண்கள்
இரத்தம் வடிக்கிறது - தாயே
தினம் நீ பாரம் சுமைக்கையிலே என் இதயம்
துடிக்க மறுக்கிறது - தாயே
இறை அருள் மறந்து பிறந்தாலும் உன்
திரு அருள் மறவாத மகனாக
பிறக்க வேண்டும் - தாயே

எஸ்.ரமேஷ் கிருஷ்ணராஜ், பதுளை

## துரதிர்ஷ்டம்தான்

தேயிலையே
நீ தேம்பித் தேம்பி
அழுவது தெரிகிறது!
சூம்பிப்போன இந்த
ஜென்மங்கள்
சொல்லியிருந்தால்
தென்னையை பாடிய
ஔவையார்!
உன்னையும் பாடியிருப்பார்
என்றுதானே? அவர்
வாழ்ந்த காலத்தில்
உன்னை எவரும்
காணவில்லையோ?
துரதிர்ஷ்டம்தான்!
கண்டிருந்தால் உன்னை
மட்டுமல்ல உன்னை
வளர்த்தெடுக்க
பாடுபட்ட
இந்த உருக்குலைந்த
சமுதாயத்தின்
உணர்ச்சிகளையும்
அழகு தமிழால்
அடுக்கடுக்காக
பாடியிருப்பார்!



மு.பெ.ஜெயராஜ், ஹெரப்டன்.

## தாயிருக்கொரு மடல்

உள்ளங்கையில் - ஓர்
உருண்ட உருளையில
கொடங்கையில
அணைச்சி என்ன
பூச்சாண்டி வாரானு
கடவாயில் அடக்கிவிட்ட
கட்டவிரலால திணிச்சிவிட்ட
காரத்தால கத்துமென்னை கண்டதுமே
கை நடுங்க கொல நடுங்கி,
ஊருக்குள்ள கலவ்ரமாய்
உம் மனசு ஆனதென்ன?
அடுப்புக்கே குளிரும்போதும்
பானைக்கே பசிக்கும்போதும்
ஒத்த பருக்கையில பசியாறி
எம் மூக்கு முட்ட பால் தருவ
பசியாறும் பிஞ்சி
முகம் கண்டு - நீ விட்ட கண்ணீரும்
எங்கே எனை சுட்டுடுமோ - என பயந்து
சில்லென்று வீழுதம்மா
சில்லுச்சில்லாய் சிதறுதம்மா!
சேத்துப் புண்ணுக்கு புகையிலையும்
வெந்த புண்ணுக்கு வேப்பிலையும்
அழுகையில - உன் அணைப்பும்,
துள்ளும்போது - உன் மார்பும்
என அக்கக்கா என்னைத்
தெரிஞ்சி கேக்காமலே
தந்த தாயே....!
இப்போ தலைவலிக்கு
தண்ணிதர நாதியில்ல
நீ அங்கே... நான் இங்கே
புள்ளயின் பொலம்பலும்
கடல்தாண்டி கேட்டிடவே
சீக்கிரம் வா தாயி...
சோத்துல கையிருக்க
வாயி இன்னும் பசிச்சிருக்கு

கு.தயாநிதிபாபு, நோர்வூட்



## தலைவா

தலைவா தங்கத் தமிழா!
நட்புக்கு இலக்கணம் கூறும்
நண்பனாய் நீங்கள் இருந்து
நாளைய உலகில்
நட்பில் நட்சத்திரமாய்
நடனத்தில் நாயகனாய்
கதையில் கவிஞனாய்
சண்டையில் சத்ரியனாய்
உள்ளத்தை கொள்ளையடிக்கும்
பாடகனாய் எம் இருதயத்தில்
தாங்கள் - அதை என்றும் மறவா
ரசிகனாய் நாங்கள்

எப்.எல்.சசிக்கா, ஹெரப்டன்.

## ஏன் பிடிக்கவில்லை

உனக்கு என் சிரிப்பைப் பிடித்தது
என் கண்ணைப் பிடித்தது என்
மனதைப் பிடித்தது - இறுதியில்
என்னிடம் இருக்கும் எல்லாம்
பிடிக்க - ஏன் என் காதலை மட்டும்
பிடிக்கவில்லை என் உயிரே!

ஷபீஹா பைஸர், கொழும்பு-15.

## தேவதை

பேருந்தில்
நீ அமர்ந்து விட்டு
சென்ற பின்னும் அதே இடத்தில்
நகராமல் இருக்கின்றது
உன் அழகும் என் மனதும்!

கிருஷ்ணராஜா, ஸ்டேலிங்.



## வருவாயா

இரவுக்காக நிலவு
காத்திருக்கிறது
விடியலுக்காக ஞாயிறு
காத்திருக்கிறது
நிலவை காண இரவு சென்றது
ஞாயிறை காண விடியல் சென்றது
கடலாக நான் உன்னை
காண காத்திருந்தேன்
நீ என்னைக் காண
அலையாக வருவாயா???
சுனாமியாக வருவாயா???

அ.கிறிஸ்து மேரி,
பிங்கர்எவ நமுனுகுல.

உதய சூரியன் "கவிதைச்சமர்"
ஏசியன் மீடியா பப்ளிகேஷன்
இல. 68, எலிஹவுஸ் வீதி, கொழும்பு-15.
பெயர்:-------------------------
முகவரி:-------------------------
தொலைபேசி இல-------------------

வாழ்வரசி அன்று முழுவதும் வகுப்பறையில் கடுமையான யோசனையுடனும் அதிர்ச்சியுடனும் இருந்தாள். அவளால் பாடங்களில் கவனம் செலுத்தமுடியவில்லை. அவளுடைய சக மாணவிகள் அவளிடம் என்ன நடந்தது ஏன் இப்படியிருக்கிறாயென்று கேட்டபோதும் அவள் எதுவும் பேசவில்லை. அவள் எதைச் சொல்வாள்?

வழமையாக சற்று பயத்துடன் அவள் பாடசாலைக்கு வந்தபோது எதுவுமே நடக்கவில்லை. ஆனால், மூன்றாவது நாள் கமலக்கண்ணன் இடைவேளை சமயத்தில் அவளிடம் “உன்னிடம் முக்கியமாக பேசவேண்டியுள்ளது. பாடசாலை முடிய காரியாலயத்துக்கு வரவேண்டும். இதை யாரிடமும் சொல்லத் தேவையில்லை. பிரச்சினையில்லாம படிக்க வேணும்னா என்னை வந்துபார்...”

வாழ்வரசி சட்டென எழுந்தாள். ஆசிரியரிடம் அனுமதி கேட்டுவிட்டு கழிவறையை நோக்கிச் சென்றாள். கதவை மூடிக் கொண்டாள். வெளியே மாணவர்களின் சத்தத்தினால் எதுவும் தெளிவாக கேட்கக்கூடியதாக இல்லை. எனவே அவள் தேம்பித் தேம்பி அழுதது யாருக்கும் கேட்கவில்லை. கமலக்கண்ணன் என்ன சொல்லப் போகிறான். தன்னுடைய கல்விக்காக அவள் தன் கற்பையே பறிகொடுத்தாள். ஆனால், அடிக்கடி தொந்தரவு செய்தமையினால்தான் அவள் தமிழிடமும் முறையிட்டாள். தமிழால் அவன் சிறைக்குச் சென்றான். இன்று தமிழ் காணாமல் போனமையால் அவன் மிகுந்த தைரியத்துடன் வெளியே வந்து தன்னுடைய நடவடிக்கைகளை மறுபடியும் ஆரம்பித்து நடத்தி வருகின்றான். வாழ்வரசியை எதற்காக அவன் வரச் சொன்னானென்பது தெரியாது. ஆனால், நிச்சயமாக நல்லதற்காக இருக்காது. புனிதமான ஆசிரியத் தொழிலை இழிவுபடுத்தும் இப்படியான துஷ்டர்களினால் எப்படி மலையகம் கல்வியில் தன்னிறைவடையும்?

வாழ்வரசி கண்களை துடைத்துவிட்டு வெளியே வந்தாள். முன்னர் அவளின் துணிச்சலைக்கண்டு வியந்து பாராட்டியவர்களெல்லோரும் இப்போது எள்ளி நகையாடுகிறார்கள். முகத்துக்கு முன்னே புகழ்ந்தவர்கள் முதுகுக்குப் பின்னே சிரிக்கிறார்கள். அவள் தன்னுடைய இலட்சியத்துக்காக கற்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தினால் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டாள். இனி...?

பாடசாலை விட்டதும் அவள் தயங்கித் தயங்கி காரியாலயத்தை நோக்கி நடந்தாள். அநேகமாக அனைவருமே போய்விட்டிருந்தனர். அவள் காரியாலயத்தை அண்மித்தாள். உள்ளே கமலக்கண்ணன் மட்டுமே இருந்தான். அந்த பாடசாலைக் காரியாலயம் சற்று உயரத்தில் தனியானதொரு கட்டிடமாக இருந்தது. ஒருபுறம் காரியாலயம், மறுபுறம் வாசிகசாலை அவ்வளவுதான். பாடசாலை விட்டால் யாருமே அந்தப்பக்கம் வரமாட்டார்கள்.




வாழ்வரசி காரியாலயத்தினுள்ளே எட்டிப் பார்த்தாள்.

“வா... வாழ்வரசி இங்க நான் மட்டும்தான் இருக்கேன்.”

அவள் நடுங்கியவாறே உள்ளே சென்றாள்.

“இங்கே வா... இப்படி உட்கார்...”

“இல்ல சேர் பரவாயில்லை...”

“நீ அவன் தமிழ் பேச்சைக் கேட்டு என்னை மாட்டிவிட்டே. இப்போ அவன் இல்லை. ஆனா நான் இருக்கேன். என்னை மீறி ஒரு அணுவும் அசையாது. அதனால நீ நான் சொல்றதை கேட்டுத்தான் ஆகணும்...”

“சொல்லுங்க சேர்...”

“உன்னோட படிப்பை நீ பிரச்சினையில்லாம தொடரணும்னா நீ என்னை அனுசரிச்சிப் போகணும். நான் கூப்பிடுறப்போவெல்லாம் நீ வரணும். இப்போ பரீட்சை நடக்கிறதால உனக்கு பத்துநாள் டைம் தாரேன். அதுக்கப்புறம்... என்ன சரிதானா...?”

அவள் பேசாமல் நின்றாள். கண்களில் கண்ணீர் எட்டிப் பார்த்தது. தலை தானாகக் கவிழ்ந்தது.

“அழுதோ, பிடிவாதம் பிடிச்சோ ஒண்ணுமே ஆகப் போறதில்லை. நான் முடிவு பண்ணிட்டேன். இப்ப நீ போகலாம்.”

அவள் சோர்வுடன் வெளியே வந்தாள். இனியென்ன செய்வது. கல்வியா, கற்பா? உயிரா, மானமா? மானம்தான் பெரிது. தமிழ்சேர் இனி வரமாட்டார். அவருக்கு என்னவோ நடந்துவிட்டது. இருளிலிருந்து எங்களை வெளிச்சத்துக்கு கொண்டுவந்தவர் இன்று என்னவானாரென்று தெரியவில்லை. இந்த பத்து நாட்களுக்குள் அவர் வர வேண்டும். அப்படி வராவிட்டால் தீர்க்கமானதொரு முடிவை எடுத்துவிட வேண்டியதுதான். தமிழ்சேர் தீமைகளை தட்டிக் கேட்டீர்கள். கெட்டவர்களுக்கு சிம்மசொப்பனமாக இருந்தீர்கள். கடைசியில் அவர்களின் சூழ்ச்சியில் பழியாகிவிட்டீர்களா? வழுக்கு மரம் போன்றதுதான் வாழ்க்கை. விடாமுயற்சியும் கடினமும் இல்லாமல் வெற்றியில்லையென்று அடிக்கடி கூறுவீர்களே...

அவள் பாடசாலையைவிட்டு வெளியே வந்தாள். அவள் தாய்க்கு இரண்டு மூன்று நாட்களாக சுகமில்லை. டவுணில் வைத்தியரிடம் காட்டியபோது அவர் மாத்திரைகள் எழுதிக் கொடுத்திருந்தார். அவள் மனதில் ஒரு திட்டம் உருவானது. அவளுடன் படிக்கும் மாணவியின் அண்ணன் வேலை செய்யும் மருந்தகம் அவளுக்குத் தெரியும். அதைநோக்கி நடந்தாள். தாய்க்கு மருந்தெழுதித் தந்த சீட்டைக் கொடுத்தவாறு அவனிடம் இப்படிச் சொன்னாள்.

“அண்ணே... அந்த துண்டுல டொக்டர் தூக்க மருந்தெழுத மறந்துட்டார். பத்து நாளைக்கு வர்றமாதிரி...”

“பத்து நாளைக்கு பத்து மாத்திரைகள் ஒண்ணா தர முடியாது தங்கச்சி... ஐந்து மாத்திரை சாப்பிட்டாலே டேஞ்சர்...”

“இல்ல அண்ணா நான் சரியா பார்த்து குடுத்துடுவேன்...”

“சரி... தாரேன்... யாருக்கும் சொல்ல வேணாம். ரொம்பக் கவனம்...”

(தொடரும்...)

என்னை யார் என்று தெரிகிறதா?
06 ஆம் பக்கத்திற்கான விடை
ஸ்ரீவித்தியா



## இந்த வாரம் உங்களுக்கு எப்படி

**28.11.13 முதல்**

**04.12.13 வரை**

| | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
|---|---|---|---|---|---|---|---|
| மேஷம் | தனம் | போட்டி | பெருமை | பக்தி | உற்சாகம் | நஷ்டம் | நற்செயல் |
| ரிஷபம் | பக்தி | வெற்றி | பொறாமை | தனம் | இலாபம் | வரவு | பாராட்டு |
| மிதுனம் | சினம் | செலவு | நன்மை | ஆர்வம் | உயர்வு | இலாபம் | பாசம் |
| கடகம் | இலாபம் | கோபம் | பாசம் | நற்செய்தி | செலவு | உற்சாகம் | நன்மை |
| சிம்மம் | பயம் | தடங்கல் | அச்சம் | உதவி | ஏமாற்றம் | பாராட்டு | வெற்றி |
| கன்னி | கவலை | தாமதம் | சிக்கல் | மேன்மை | வைராக்கியம் | கவலை | ஆர்வம் |
| துலாம் | பரிவு | சுபம் | தேர்ச்சி | முன்னேற்றம் | ஆதாயம் | கவனம் | முயற்சி |
| விருச்சிகம் | பாசம் | பகை | தெளிவு | பரிசு | சஞ்சலம் | ஆதரவு | அச்சம் |
| தனுசு | வாழ்வு | வரவு | நிம்மதி | பாராட்டு | சிந்தனை | வெற்றி | பக்தி |
| மகரம் | உதவி | புகழ் | பாராட்டு | வெற்றி | தொல்லை | போட்டி | பொறுமை |
| கும்பம் | முயற்சி | பாராட்டு | அமைதி | உழைப்பு | முயற்சி | பொறுமை | நலம் |
| மீனம் | சோதனை | முயற்சி | பணிவு | மேன்மை | அதிருப்தி | மேன்மை | விவேகம் |

# அட்டன் வலய ஆசிரியர்களின் சம்பள நிலுவை ! நடவடிக்கை எடுக்கப்படுமா?



அறிவைப் புகட்டுபவர்கள் ஆசிரியர்கள். எனவேதான் இவர்கள் சமூக நன்மதிப்புடன் நட்சத்திரங்களாக மிளிர்கின்றனர். ஒரு மனிதனை சமூகத்தில் மதிப்புமிக்க ஒருவனாக உருவாக்குவதில் இவ்வாசிரியர்களே காரணகர்த்தாக்கள். இப்படிப்பட்ட ஆசிரியர்களுக்கும் பல பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன.

அட்டன் கல்வி வலயத்தில் சேவையாற்றும் சுமார் ஆயிரத்திற்கும் அதிகமான ஆசிரியர்களுக்கு நிலுவை சம்பளம் வழங்கப்படவில்லையென அங்கு சேவையாற்றும் ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக இவ்வாசிரியர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இக்கல்வி வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்கள் சம்பள உயர்வு பெறுவதற்காக நிர்வாகப்பிரிவினால் கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும் குறித்த நிலுவை சம்பளம் இன்னும் வழங்கப்படவில்லையென ஆசிரியர்கள் விச னம் தெரிவிக்கின்றனர். மேலும் ஒருசிலருக்கு 16 வருடகால நிலுவைச் சம்பளம் கூட இன்னும் வழங்கப்படாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறானதொரு நிலையில் ஆசிரியர்களின் இன்னல்களை அறிந்தும் கல்வி வலயத்தின் கணக்குப்பிரிவு உத்தியோகஸ்தர்கள் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்வது மிகவும் கவலையளிப்பதாக இவ் ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். சிலர் தனது பொருளாதார நிலைமையினை சமாளிக்க முடியாத சந்தர்ப்பங்களிலும், இடர்கள் நேர்ந்த சந்தர்ப்பங்களிலும் அவற்றை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் உயரதிகாரிகளின் கையொப்பத்தினை பெற்று சமர்ப்பித்த போதிலும் அவற்றை பொருட்படுத்தாது செயற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் அட்டன் கல்வி வலயத்திலுள்ள சகல கல்விப்பணிப்பாளர்களிடமிருந்தும் நிலுவைச் சம்பளம் வழங்குமாறு கடிதங்களைப் பெற்றுக் கொடுத்த போதிலும் அவற்றை பொருட்படுத்தாத நிலைமையே காணப்படுவதாக இவ் ஆசிரியர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

மேலும் இப்பகுதியிலுள்ள தொழிற்சங்கங்களும், மக்கள் பிரதிநிதிகளும் ஆசிரியர்களின் உரிமைகள், சலுகைகள் குறித்து எந்தவகையிலும் கவலை கொள்வதில்லை எனவும் அவர்களின் பதவிகளை தக்கவைத்துக் கொள்வதில் மாத்திரம் கவனம் செலுத்துவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒரு சில தொழிற்சங்கங்கள் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்குவதில் மாத்திரம் கவனம் செலுத்துவதாகவும் ஒரு சில தொழிற்சங்கங்கள் வாய்ப்பேச்சில் மாத்திரம் சாதனை செய்வதாகவும் தெரிவிக்கப்படும் அதேவேளை மாகாணசபை, பாராளுமன்றம் போன்றவற்றில் இக் கல்விவலயத்தைச் சேர்ந்த தமிழ்ப்பிரதிநிதிகள் இருந்தும் இவ்வாசிரியர்கள் தொடர்பாக எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென கவலையடைவதோடு இவ்வரசியல் தலைவர்களில் அதிகமானோர் ஆசிரியர்களை தேர்தல் காலங்களில் தங்களின் வெற்றிக்காக பயன்படுத்தியவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் தங்களின் உரிமை சலுகை என்பது எவரும் தாம்பூலத்தட்டில் வைத்து கொடுத்ததில்லை. அவற்றை பெறவேண்டும் என்றால் ஆசிரியர்கள் உரிமைக்காக போராடும் மனவலிமையை வளர்த்துக் கொண்டு நேர்மையாக நடக்க வேண்டும். அப்போது தான் ஆசிரியர்களின் உரிமை காப்பாற்றப்பட்டு தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என தொழிற்சங்கவாதிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் அட்டன் கல்வி வலயத்தில் தமிழ் மொழிமூல ஆசிரியர்களே அதிகமாக சேவையாற்றுகின்றனர். மேலும் இப்பிரதேசத்திலேயே தமிழ் பேசும் அதுவும் பெருந்தோட்ட சமூகம் சார்ந்த தொழிற்சங்கவாதிகள், அரசியல் தலைவர்கள் பெரும்பாலானோர் பதவி வகிக்கின்றனர். இன்னும் சொல்வதானால் கடந்த மாகாணசபைத் தேர்தல் வரையிலும் தமிழ்க் கல்வி என்ற அமைச்சு ஒன்றும் மலையக பிரதிநிதிகளின் வசம் இருந்துள்ளது. இந்நிலையில் பல வருடங்களாக இவ் ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவை வழங்கப்படாமல் இருப்பது சிந்திக்க வேண்டிய விடயம்.

யார் என்ன கூறினாலும் ஆசிரியர் என்பவர் சமூகத்தின் நலனுக்காக போராடுபவர்கள். மலையகத்தைப் பொறுத்தமட்டில் சமூகத்தின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருபவர்கள். அவர்களின் குறைகள் தீர்க்கப்பட வேண்டும். இதற்கான தீர்வினை பெற்றுக்கொடுக்க ஆசிரியர்களை முன்னிலைப்படுத்தி ஆட்சிநடத்துபவர்கள் முன்வரவேண்டும். தொடர்ந்தும் இவ்வாறு ஆசிரியர்களின் குறைகள் நிவர்த்திசெய்யப்படாமல் காணப்படுமாயின் பாதிக்கப்போவது மலையக சமூகத்தின் எதிர்காலமேயன்றி வேறுயாருமல்ல.

**நமசிவாயம்**



உன் முதுகுக்கு பின்னால் பேசுபவர்களைப் பற்றி கவலைப்படாதே..!

நீ அவர்களுக்கு இரண்டு அடி முன்னால் இருக்கிறாய் என்று பெருமைப்படு!



இங்கே யார் ஊனம்



சூப்பர் கம்ப்யூட்டர் குடும்பம்



பிறரை மாற்றிக்கொள்ள புத்தி சொல்கின்றனர்.
தன்னை மாற்றிக்கொள்ள யாருமே நினைப்பதில்லை.

# கொஞ்சம் சிரிக்க சிந்திக்க



மனைவி: பின்னாடி பிகர் இருந்தா கண்ணு தெரியாதானு லொறிக்காரன் திட்டிட்டு போறான். நீங்க சிரிக்கிறீங்க?

கணவன்: உன்னப் போய் பிகர்னு சொல்றான்... அவனுக்குதான் கண்ணு தெரியல!!!!

## பெண்ணின் ஆசை

ஆசை என்ற சொல்லுக்கு என்(பெண்) அகராதியில் உள்ள பொருள் :

தந்தையின் ஆசை, தாயின் ஆசை, கணவனின் ஆசை, பிள்ளைகளின் ஆசை இவை அனைத்துமே என் ஆசை என்று எனக்குள் திணித்துக் கொண்டிருக்கிறேன்.

என் ஆசையை எவரும் காது கொடுத்து கேட்டதும் இல்லை, அப்படி கேட்டாலும் அதை பெரிதாய் எடுத்துக் கொள்வதும் இல்லை.

ஆசைகள் ஒவ்வொன்றையும் இழக்க நான் ஆசைப் படாத துன்பம் என்னை சூழ்ந்து கொள்கிறது.

துன்பம் வரும் வேளையில் சிரித்திருந்தால் என்னை பைத்தியம் என்றிருப்பார்கள், சிரிக்காமல் போனதாலோ என்னவோ இன்று நானே என்னைப் பார்த்து பைத்தியம் என்று திட்டிக்கொள்கிறேன்.

இது என் நிலை மட்டும் அல்ல.. உங்கள் தாய், தங்கை, அக்கா, மனைவி, மகள் உட்பட பல பெண்களின் நிலை இதுதான்...

அறிவாளி பாஸ் நீங்க...





மரத்தை வெட்டி விட்டு....! அதில் செய்த விசிறியை வைத்து வீசிக் கொண்டு சொல்கிறான்.... காற்றே வர வில்லை என்று!!!



உன் எதிர்காலத்தை செதுக்கும் உளி உன்னிடம் மட்டுமே உள்ளது..



தினமும் உங்கள் மூளையை புதுப்பித் துக்கொள் ளுங்கள்.

## பேராசை

எழுபது வயது மூதாட்டி கடவுளை நோக்கி, 'இன்னும் ஐம்பது ஆண்டுகாலம் உயிரோடு இருக்க வேண்டும்', என தவமிருந்தாள். அவளது தவத்தை மெச்சிய ஆண்டவனும், 'தந்தேன் வரம்!', என்று சொல்லி மறைந்தான்!

ஜாலியாக துள்ளிக் குதித்து வீட்டிற்குள் நுழைந்து நல்லதொரு ஜீன்ஸ் பேண்ட், பனியன் போட்டு, வாங்கி வைத்த மேக் அப் சமாச்சாரங்களால் தன்னை அலங்கரித்துக் கொண்டு, ஆளே அடையாளம் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு இருபது வயது பெண் போல வெளியே வந்தாள்.



யாரும் தன்னை இனி சாகடிக்க முடியாது என்னும் தைரியத்தில் ரோட்டை ஆடியவாறே கடந்தாள். அப்போது வேகமாக வந்த லொறி, அவள் மீது மோத அந்த இடத்திலேயே பரிதாபமாக அடிபட்டு இறந்தாள்.

மேலுலகத்துக்கு சென்ற அவள் எமனை உலுக்கிக் கேட்டாள், 'வரம் கொடுத்த கடவுளையும் மீறி என்னை இங்கு கொண்டு வர என்ன தைரியம் உனக்கு? எதனால் அப்படிச் செய்தாய்?' அதற்கு எமன் சொன்ன பதில்?

''ஓ கடவுள் காட்டிய அந்த எழுபது வயது மூதாட்டி நீதானா? உன்னை எனக்கு அடையாளமே தெரியவில்லை!'', என்று சொல்லி விட்டு எமலோகமே அதிரும்படி இடியிடி என சிரித்தான்.

*நீதி : அதிக மேக்அப் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும்!*

## வேலைக்காரி



முன்பெல்லாம் அதிக விலை கொடுத்து மாடுகளை வாங்கும் மாட்டுச் சந்தை அதிகம் இருந்தது. தற்போது அதிக விலை கொடுத்து மணப்பெண்களை விற்கும் இணையத்தள திருமண சந்தைகள் அதிகமாகிவிட்டன.

அதிக நகை பணத்தோடு ஒருவர் வீட்டின் எஜமானி என்ற பெயரோடு காலடி எடுத்து வைத்தாலும் பேருக்குத்தான் அவள் எஜமானி...

நிஜத்தில் அவள் சம்பளம் இல்லாத வேலைக்காரி.



நபர் : ஹலோ! கோலிங் பெல் சரியா வேலை செய்யலைன்னு நாலு நாள் முன்னாடி போன் பண்ணியிருந்தேனே?

எலெக்ரீஷியன் : நீங்க சொன்னீங்களேன்னு நானும் நாலு நாளா உங்க வீட்டுக்கு வந்துட்டுதான் இருக்கேன். எங்க, பெல் அடிச்சா யாரும் வந்து கதவைத் திறக்கவேயில்லையே?

# விதியின் விளையாட்டு

## ஒரு திகில் அனுபவம்

விதி தன் விளையாட்டுக்கு அடிக்கடி நொந்து போனவர்களையே பலியாக்கிக் கொள்கிறது. விதி அடிக்கும் ஒவ்வொரு அடியும் அவர்களது வாழ்க்கையை துயரத்தின் எல்லைக்கே கொண்டு சென்று விடுகிறது!

சுனிலின் வாழ்க்கையிலும் அப்படித்தான்.

கடந்த 2 வருடங்களுக்கு முன். சுனிலின் வயது 24. வீட்டில் அம்மா மற்றும் தங்கை நிலு மட்டும்தான். சுனிலுக்கு 10 வயது இருக்கும்போதே சுனிலின் அப்பா இறந்துவிட்டார். அம்மா சுனிலையும், நிலுவையும் வளர்க்க பெரும்பாடுபட்டாள்.

அம்மா ஒவ்வொரு நாளும் கூலி வேலை செய்துகொண்டு வரும் பணத்தில் வீட்டில் அடுப்பெரியும்.

அம்மா இப்படி தினம் தினம் கஷ்டப்படுவதைப் பார்த்த சுனில் நான் ஆண்பிள்ளை எனக்கு படிப்புத் தேவையில்லை. இனி நானும் அம்மாவுடன் சேர்ந்து வேலைக்குச் செல்கிறேன் எனக் கூறி அம்மாவோடு வயலுக்கு கூலி வேலைக்குச் செல்ல ஆரம்பித்தான்.

சுனிலின் ஆறு வருட உழைப்பில் அந்த குடும்பத்தில் இரண்டு வேளை சாப்பாடு கிடைத்தது. 16 வயதடைந்த சுனில் கூலி வேலையை விட்டு கொழும்பின் புறநகர்ப்பகுதியில் இயங்கும் ஒரு பிரபல தும்புத் தொழிற்சாலையில் வேலைக்கு சேர்ந்தான். ஒவ்வொரு மாதமும் கை நிறைய சம்பாதித்தான். அவனால் அவனின் குடும்பம் வறுமையின் பிடியிலிருந்து மீண்டது. தங்கை நிலுவையும் பாடசாலைக்கு அனுப்பி படிக்க வைக்க முடிந்தது.

இப்படி 3 வருடங்கள் காலை முதல் மாலைவரை தன் குடும்பத்திற்காக அயராது உழைத்தான் சுனில். ஆனால், விதி தன் விளையாட்டுக்கு தேர்ந்தெடுத்த யாரையும் நிம்மதியாக வாழவிடுவதில்லையே!

சுனிலுக்கு உடம்பில் ஒரு பக்கம் அடிக்கடி செயல் இழக்க ஆரம்பித்தது. இப்படி மாதத்திற்கு ஒரு முறை இரண்டுமுறை வரும். அந்த நேரத்தில் அவன் அதை பொருட்படுத்தாமல் சிறிது நேரம் ரெஸ்ட் எடுத்துவிட்டு மீண்டும் தன் வேலையைத் தொடருவான்.

ஆனால், காலப்போக்கில் இந்த வருத்தம் ஒவ்வொரு கிழமையும் வந்தது. உடனே தன் நண்பர்களுடன் வைத்தியசாலைக்கு சென்றபோது இது ஒரு வாதம் சம்பந்தப்பட்டது உடனடியாக ஆயுர் வேத மருந்துகளை பயன்படுத்துவது நல்லது என்றார்கள்.

நாளாக நாளாக சுனிலின் நிலை மோசமானது. அவனது உடலின் ஒரு பகுதி நிரந்தரமாக செயலிழப்பதைப் போலிருந்தது. இந்த விடயத்தை வீட்டில் சொன்னால் அம்மா தங்கச்சி மிகவும் கவலைப்படுவார்கள் என்று நினைத்து சொல்லாமல் மறைத்தான்..

சுனிலின் நிலைமையை அவதானித்த முதலாளி சிறிது பணம் கொடுத்து அவனை வேலையில் இருந்து விலக்கி வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

வீட்டின் சுமை தாங்கியான சுனில் வீட்டுக்கே சுமையாக வந்து சேர்ந்தான். அவனது நிலையைக்கண்டு அம்மாவும் தங்கையும் கதறி கண்ணீர் வடித்தார்கள். மீண்டும் சுனிலின் அம்மா வேலைக்குப்போக தொடங்கினார்.

சுமார் மூன்று மாதம் சுனில் வீட்டிலே முடங்கிக்கிடந்தான். சுனிலின் தங்கை நிலுவுக்கு தன் அண்ணனின் நிலையும் தன் அம்மாவின் நிலையையும் கண்டு மிகவும் கவலையாக இருந்தது. எப்படியாவது அண்ணனை சுகப்படுத்த வேண்டும் அதற்கு பணம் தேவை, அதற்காக இறப்பர் தோட்டத்திற்கு வேலைக்கு சென்றாள். ஒவ்வொரு நாளும் வேலை முடிந்து வருவதற்கு இரவு 7.00 மணியாகும். சுனில் தடியை ஊன்றியவாறே மெல்ல மெல்ல நடந்து சென்று பஸ் நிலையத்தில் காத்திருந்து நிலுவை வீட்டுக்கு அழைத்து வருவான்.

நாளுக்குநாள் சுனிலின் நிலை மோசமடைந்தது. உடம்பில் இடது பக்கம் முற்றாக செயலிழந்தது.

நிலு சுனிலை ஒரு ஆயுர்வேத மருத்துவரிடம் அழைத்துச் சென்று காட்டினாள். அவர் தைலம் மற்றும் சில மருந்துகளைக் கொடுத்தார்.

இந்த வைத்தியத்தை செய்து வர சுனில் மூன்று நான்கு மாதத்தில் ஓரளவு தேறினான். கைகள் இரண்டுக்கும் கைப்பிடி வைத்து நடக்கப் பழகினான். ஆனால் சுனிலின் மூளைப்பகுதி செயலிழக்க ஆரம்பத்திருந்தது. இனங்காணப்படாத அவனது வியாதி அவனது ஆயுளின் இறுதிப்பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருப்பதை சுனிலோ அவனது குடும்பத்தினரோ அறியவில்லை.

ஒருநாள் நிலு வேலை முடித்து வருவதற்கு இரவு எட்டு மணியாகியது. அன்று சரியான மழை. அத்தோடு இருட்டு வேறு. சரியாக இரவு எட்டு பதினைந்து இருக்கும். பஸ்ஸில் இருந்து நிலு இறங்கினாள்.

அப்போது பஸ் நிலையத்தில் சுனில் குடையுடன் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

பஸ்ஸைவிட்டு இறங்கிய நிலுவுக்கு சுனிலின் முகத்தை பார்க்க ஆச்சரியமாக இருந்தது. ஆம் அந்த இரவிலும் அத்தனை தேஜஸ் சுனிலின் முகத்தில்.



நடையிலும் பாவனையிலும் அத்தனை வித்தியாசம். அப்போது பூத்த பூ மாதிரி சிரித்த முகத்துடன் உட்கார்ந்திருந்தான். நிலுவுக்கு இதைப் பார்க்க பார்க்க சந்தோஷமாக இருந்தது.

என் அண்ணன் எந்த நோயும் இல்லாமல் பூரண குணமடைந்து வருகிறான் என நினைத்தாள்.

நிலு, அண்ணா என்று சொல்லி ஓடிவந்து அவன் கைகளை இறுக பிடித்துக் கொண்டான்.

ஆனால் சுனில் ஒரு வார்த்தைக்கூட பேசவில்லை. இருவரும் நடந்தார்கள். மழை சோவென்று பெய்தது. வீதியில் கரடு முரடான பாதைகளை கடந்து வீட்டுக்கு அருகில் வரும்வரை நிலு சுனிலின் கையை பிடித்துக்கொண்டுதான் வந்தாள். வீட்டின் அருகில் வந்ததும் நிலுவுக்கு சுனில் தன் கையை உதறித் தள்ளுவதுபோல் இருந்தது. சடுதியாக திரும்பினாள். சுனிலைக் காணவில்லை. திடுக்கிட்டுப் போனாள்.

சரி மழை என்ற படியால் கையை உதறிவிட்டு மறுபக்கத்தில் வீட்டுக்குள் ஓடியிருப்பான் என்று நினைத்த நிலு வேகமாக வீட்டுக்கு சென்றாள்.

அப்போது வீட்டுமுன் விறாந்தையில் நிறைய பேர் குவிந்திருந்தது தெரிந்தது.

யார் வந்திருக்கிறார்கள் ஏன் இவ்வளவு சனம்? என்று நினைத்த நிலு வேகமாக உள்ளே நுழைந்தாள். அங்கே அவளுக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது.

ஆம் தன் உயிர் அண்ணன் சுனில் சவப்பெட்டிக்குள் கண்மூடிக் கிடந்தான். அவளுடைய கண்களையே அவளால் நம்பமுடியவில்லை.

தான் காண்பது கனவா அல்லது நனவா! ஐயோ கடவுளே இத்தனை நேரம் என்னோடு வந்தது யார்? அத்தனையும் என் பிரமையா...! என்பது புரியாமல் மயங்கிவிழுந்தாள்.

கண்விழித்து பார்த்தபோது வீட்டில் தான் கண்ட காட்சிதான் உண்மையானது என்பது புரிந்தது. அண்ணனுக்கு என்ன நடந்தது என்று அம்மாவிடம் கேட்டு அழுதாள். மதியம் வரை நன்றாக இருந்த சுனில் திடீரென்று நெஞ்சிற்குக் கீழ் உணர்விழந்து போய் கீழே விழுந்துவிட்டான். உடனே வைத்தியர் வந்து பார்த்தார். வியாதி முத்திவிட்டது காப்பாற்றுவது கடினம் என்றார். உனக்கு தகவல் சொல்லி அனுப்ப வழி தெரியவில்லை. நீ இன்று எந்த இடத்திற்கு வேலைக்கு சென்றாய் என்பதும் தெரியவில்லை. அதனால்தான் உனக்கு தகவல் சொல்லமுடிவில்லை. மாலை 6 மணிக்குத்தான் இவன் உயிர் பிரிந்தது என்று சொல்லி அம்மா அழுதாள்.

அப்போது நிலுவுக்கு நினைவு வந்தது. ஆம், சுனிலுக்கு என்மீது அத்தனை பாசம் அதனால்தான் நான் தனியாக வருவேன் என்று எனக்கு துணைக்கு வந்திருக்கிறான் என்பதை அம்மாவிடம் சொல்லி அழுதாள்.

- ஜாபி -

# கலாட்டா





இதெப்படி இருக்கு



மேக்கப் இல்லாத கஜோல்

## மாத்தியோசி






மீசையில் வித்தியாசம் காட்டும் விக்ரம்



மகளுடன் ஐஸ்வர்யா ராய்!



காச சுண்டினா,
பூ விழுமா? தல விழுமா?
காசு தாண்டா விழும்!




இந்த காலத்து பிரபல நடிகைகள் 1970 களில் சினிமாவிற்கு வந்திருந்தால்?

அடே நீயும் உன் தொம்பியும் மாசத்துக்கு
மூணு படம் ரிலீஸ் பண்ணா நாங்கள்லாம்
எங்க போறது?



- தொகுப்பு அபி -

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டாரால் (இல-68, எலிஹவுஸ் றோட், கொழும்பு-15) 28.11.2013 வியாழன் 94, பரமானந்த மாவத்தை கொழும்பு-13, தினக்குரல் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.